Follow us

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 489 பிலவ வருடம், பங்குனி மாதம் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (29.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 25 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

## இந்தியாவிடம் மேலும் ஒரு பில்லியன் டொலர்களை கோரும் இலங்கை

இலங்கை பல தசாப்தங்களாக எதிர்நோக்காத மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிவரும் நிலையில், அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதிசெய்ய இந்தியாவிடம் மேலும் ஒரு பில்லியன் டொலர்களை கடனாக கேட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இதனை இரண்டு தரப்புகளும் நேற்று உறுதி செய்துள்ளதாகவும்...

02 பக்கம்

## அமைச்சுப் பதவிகளுக்காக மாநாட்டை புறக்கணிப்பு

### அமைச்சர் சி.பி.ரத்நாயக்க சாடல்

(யோ.தர்மராஜ்)

அமைச்சுப் பதவிகள் வழங்கப்படாத காரணத்தினால் சில கட்சித் தலைவர்கள் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை - என வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பகமுவ பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று (28) நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மஸ்கெலியா இளைஞர் பேரவையின் கூட்டத்தில் கலந்துகொண்டு...

02 பக்கம்

# அரசு - கூட்டமைப்பு பேச்சு மேலும் தொடரவேண்டும்!



### தமிழர் பிரச்சினை தீர்வுக்கு இந்தியாவும் ஒத்துழைக்கும்

### உங்களது நிலைப்பாட்டில் உறுதியாக இருங்கள்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் திட்டவட்டம்

02 பக்கம்



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர், நேற்று கொழும்பிலுள்ள லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையமொன்றுக்கு சென்று நிலைமைகளை பார்வையிட்டார்.

## கொழும்பு- மொஸ்கோவுக்கிடையிலான விமான சேவை இடைநிறுத்தம்



(யோ.தர்மராஜ்)

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான அனைத்து விமான சேவைகளையும் 26ஆம் திகதி இரவுமுதல் இடைநிறுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கனின் புதிய தலைமை வர்த்தக...

02 பக்கம்



## தமிழ் முற்போக்கு கூட்டணியுடனும் ஜெய்ஷங்கர் பேச்சு..

02 பக்கம்

## அரசை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம் இன்றுமுதல்

(யோ.தர்மராஜ்)

### இலங்கை விவசாய சம்மேளனம் பொலனறுவையில் ஆரம்பிக்கிறது

அரசாங்கம் தொடர்பாக தீர்மானங்களை எடுத்து விவசாயிகளால் உருவாக்கப்பட்ட அரசை வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தை இன்று (29) பொலனறுவையில் ஆரம்பிக்கவுள்ளதாக அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளரும் ஜே.வி.பியின் ஊடகக்குழு உறுப்பினருமான நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுவரை விவசாயிகள் உரமின்றி விளைச்சல்கள் பாதிக்கப்பட்டமைக்கான நஷ்டஈட்டை...

02 பக்கம்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி கோட்டாவுடன் சந்திப்பு



இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஆரம்பமான பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொள்ளவே அவர் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாட்டை வந்தடைந்துள்ளார்.

இந்திய அமைச்சர் ஜெய்ஷங்கரை வரவேற்ற ஜனாதிபதி, உணவு, மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதிசெய்வதற்காக இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிக்கு நன்றி தெரிவித்தார்.

02 பக்கம்




மலையகத்தின் இளம் அரசியல்வாதி ஒருவர் மலையகத்திற்கு அரசால் விநியோகிக்கப்படும் கோதுமை மாவில் கிலோ ஒன்றுக்கு 2 ரூபா கமிஷன் கேட்டாராம். அரசு மறுத்ததால் அவர் சர்வகட்சி கூட்டத்திற்கு வரவில்லையாம்..

பெசிலின் வலதுகை அதிகாரி ஒருவர் பேஸ்புக்கில் எழுதியிருக்கிறார். பாவம் கத்துக்குட்டி ஜீவன்கள்...

## யாழ்ப்பாண பண்பாட்டு மையம் வைபவ ரீதியாக திறந்துவைப்பு

03 பக்கம்

## எரிபொருள் வாங்க வந்தவர் வாகனத்திற்குள்ளே மரணம்

### அத்துருகிரியவில் நடந்த துயரம்

அத்துருகிரியவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்திருந்த நபரொருவர், அவரின் வேனுக்குள்ளேயே உயிரிழந்த நிலையில்...

02 பக்கம்

## மாணவர்களை கடத்துவதாக வதந்தி : ஆலையடிவேம்பில் பெரும் பதற்றம்!

(கனகராசா சரவணன்)

### வீடுகளை கொள்ளையிட திருடர்களின் புதிய யுக்தியென தகவல்

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் 3 பேரை கடத்தல்காரர்கள் கடத்திச் சென்றதாக பரவிய வதந்தியையடுத்து பாடசாலைகளுக்கு முன்னால் பெற்றோர் ஒன்றுதிரண்டதையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டதுடன், பாடசாலையிலிருந்து தமது பிள்ளைகளான மாணவர்களை...

02 பக்கம்

## எரிபொருளை பதுக்குவோர் குறித்து பொலிஸ் நோட்டம்

### ஐ.ஜீ.பி. விசேட உத்தரவு

(யோ.தர்மராஜ்)

எரிபொருள் நிலையங்களில் கேன், பீப்பாய் (பெரல்) போன்றவற்றில் எரிபொருளை பெற்றுக்கொண்டு அதிக விலைக்கு விற்பனை செய்வோர் குறித்து அதிகம் கவனம் செலுத்துமாறு பொலிஸ் மா அதிபரினால் நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு எரிபொருளை...

02 பக்கம்

## அதிக விலைக்கு சிலிண்டர் விற்பனை

### பிலியந்தலையில் தம்பதியினர் கைது

லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களை அதிக விலைக்கு விற்பனை செய்துவந்த தம்பதியினர் உள்ளிட்ட மூவர் பிலியந்தலை விஸ்வகலா பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக...

02 பக்கம்

## ரணிலுக்கு பிரதமர் பதவியா?

### மறுக்கும் அமைச்சர் ரோஹித

(யோ. தர்மராஜ்)

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை வழங்குவதற்கு எவ்வித எதிர்பார்ப்பும் தங்களிடமில்லை - என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் பிரதமர் பதவிக்கு மிகவும்...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



பெற்றோல் ஷெட்டுக்கு போன இந்திய அமைச்சர் ஸ்ரீலங்கா அமைச்சர் ஒருவர கையோட கூட்டிப்போயிருந்தா நல்லா இருந்திருக்கும்...


## சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல அமெரிக்காவின் ஒத்துழைப்பு தேவை

### அந்நாட்டு தூதுவரிடம் சொன்னார் ஜனாதிபதி



புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களுக்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் (USAID) மூலம் கடன் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று...

02 பக்கம்



## தமிழ் முற்போக்கு கூட்டணி ஜெய்ஷங்கருடன் சந்திப்பு:

# எமது மக்களும் சம உரிமையுள்ள இலங்கைப் பிரஜைகளாக உதவுங்கள்

### இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கோரியது

இந்நாட்டில் இன்று குடியுரிமை பிரச்சினை சட்டப்படி தீர்க்கப்பட்டு விட்டாலும்கூட முழுமையான சம உரிமையுள்ள பிரஜைகளாக எமது மக்கள் அனைவரும் மாறவில்லை. ஆகவே, இலங்கை அரசுடன் உங்களுக்கு உள்ள நல்லுறவை பயன்படுத்தி, முழுமையான சம உரிமையுள்ள பிரஜைகளாக மாற, எமக்கு நீங்கள் உதவுங்கள் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கரிடம், தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்தது.

கொழும்பு இந்திய இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன், எம்.உதயகுமார் எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தியத் தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்ஷங்கர், தூதுவர் கோபால் பாக்லே, துணை தூதர் வினோத் கே. ஜேகப், அரசியல்துறை செயலாளர் பானு பிரகாஷ் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளதாவது,

இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பில், தமிழ் முற்போக்கு கூட்டணி



ஏற்கனவே கடந்த சில தினங்களுக்கு முன் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பும்படி தூதுவர் கோபால் பாக்லேவிடம் தந்திருந்த மலையக அபிலாஷைகள் ஆவணம் தொடர்பில் நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கருக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் விளக்கம் அளித்தார்.

நில வரம்பற்ற சமூக சபை தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேலதிக விபரங்களை கேட்டு தெரிந்துகொண்டார். மேலும் 13ஆம் திருத்தம் மூலமாக உருவாக்கப்பட்டுள்ள மாகாண சபைகள் முழு நாட்டுக்கும் உரித்தான அதிகாரப் பரவலாக்கல் இயந்திரம் என்பது வலியுறுத்தப்பட்டது. நாடு முழுவதும் சிதறி வாழும் அனைத்து மலையக மக்களையும் கூட்டிணைக்கும் அதிகார பரவலாக்கல் இயந்திரமாக நில வரம்பற்ற சமூக சபை செயற்படுவதை தமிழ் முற்போக்கு கூட்டணி விரும்புகிறது என்பது இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

புதிய அரசியலமைப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள குழுவிடம் இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தியத் தரப்பில் மலையக மக்களுக்கு, குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களுக்கு கல்வி, சுகாதாரம், கலாசாரம், வீடமைப்பு ஆகிய துறைகளில் உதவிகளை இன்னமும் விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

உலகளாவிய ரீதியில் இந்திய வம்சாவளி மக்கள் கூட்டிணைக்கப்படும் செயற்பாடுகளில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களை இன்னமும் முழுமையாக இணைத்துக் கொள்வது பற்றி வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்தார்.

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டின்போது முழு பட்டினியில் இருந்து இலங்கை மக்கள் இந்திய உதவியினால் காப்பாற்றப்பட்டுள்ளனர். நன்றி. அதேவேளை நாட்டு மக்களுக்கு உணவளிக்க முடியாத அவமானத்தில் இருந்து இந்நாட்டு அரசாங்கமும் தற்காலிகமாக காப்பாற்றப்பட்டுவிட்டது. இந்நிலைமை தொடர்ந்து நீடிக்க முடியாது. தொடர்ந்து வெளியில் இருந்து உணவு வர முடியாதே. நாம் எமக்குள் விரைவில் இவற்றுக்கு தீர்வு காணுவோம் என கூட்டணி தலைவர் மனோ கணேசன் வெளிவிவகார அமைச்சருக்கு மேலும் விளக்கம் அளித்தார்.

## நாட்டில் இன்று ஏழரை மணி நேர மின்வெட்டு

(யோ.தர்மராஜ்)

மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருளை வழங்க முடியாமை மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர்மின் உற்பத்திக்கான நீர் இல்லாததால் இன்று (29) "ஏ" முதல் "எல்" வரையிலான 12 வலயங்களில் 7 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, பி முதல் "டபிள்யூ" வரையான எட்டு வலயங்களில் இன்று (29) 7 மணித்தியாலங்கள் 15 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது.

"ஏ" முதல் "எல்" வரையிலான 12 வலயங்களில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை பகல் 5 மணி நேரமும் மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை 2 மணி 30 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

"பி" முதல் "டபிள்யூ" வரையிலான 8 வலயங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை 5 மணி நேரமும் மாலை 6.30 மணி முதல் இரவு 11.00 மணி வரை 2 மணி நேரம் 15 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

## எரிபொருள் நிலையத்தில் முச்சக்கர வண்டியில் தீ

(யோ. தர்மராஜ்)

பண்டாரகம பகுதியில் எரிபொருள் நிலையத்தினுள் முச்சக்கரவண்டி ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

எரிபொருளை நிரப்பிக் கொண்டு முச்சக்கர வண்டியை இயக்குவதற்கு தயாராகும் போதே இவ்வாறு தீப்பிடித்துள்ளது.

எனினும், எரிபொருள் நிலைய ஊழியர்கள் விரைந்து செயற்பட்டு தீயை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளனர்.

தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமையினால் பாரிய அனர்த்தம் தடுக்கப்பட்டதோடு, யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என எரிபொருள் நிலைய ஊழியர்கள் தெரிவித்தனர்.



### இந்தியாவிடம்...

அதில் கூறப்பட்டுள்ளது. கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பானது 70 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு தேவையான பணத்தை செலுத்த முடியாத நிலைமையை இலங்கை எதிர்நோக்கி வருகிறது.

இதன் காரணமாக இலங்கை ரூபாவின் பெறுமதியும் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை ஏற்கனவே அத்தியாவசியப் பொருட்கள், மருந்து மற்றும் எரிபொருளை இறக்குமதி செய்ய இந்தியாவிடம் இருந்து 1.4 பில்லியன் டொலர்களை கடனாக பெற்றுக்கொண்டுள்ளது.

### அமைச்சுப் பதவிகளுக்காக...

கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளாதவர்கள் நாட்டைப் பற்றி சிந்திக்காமல் தனிப்பட்ட தேவைகளையும் இலக்குகளையும் அடையும் நோக்கத்திலேயே குறித்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

அரசியல் வேறுபாடுகளுக்கு மத்தியிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, இந்த மாநாட்டில் கலந்து கொண்டு நாட்டின் சார்பாக பல யோசனைகளையும் முன்வைத்தமை பாராட்டுக்குரிய விடயமாகும் - என்றார்.

### கொழும்பு...

அதிகாரியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ரிச்சர்ட் நட்ல் இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில ரஷ்யாவிலிருந்தே இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைதந்தனர்.

ரிச்சர்ட் நட்லினால் எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவு ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு மாத்திரமன்றி, இலங்கையின் சுற்றுலாத் துறையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ரஷ்ய - உக்ரைன் யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இவ்வாறு விமான சேவையை இடைநிறுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

### இந்திய வெளிவிவகார...

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 வருடங்களைக் கொண்டாடும் வகையில் விசேட நினைவு நாணயமும் முத்திரையும் வெளியிடப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நிகழ்வை குறிக்கும் வகையில் பல நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

### எரிபொருளை...

பெற்றுக்கொள்வதனாலேயே நாட்டில் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாகும் என்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உரிய அனுமதிப் பத்திரமின்றி எரிபொருளை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதோடு, பிடியாணையின்றி கைது செய்யப்படக் கூடிய குற்றமாகும் என்றும் பொலிஸ் மா அதிபரினால் அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்திட்டங்களுக்கு அப்பால் செயற்படும் நபர்கள் குறித்து ஆராய்வதோடு, தேவையான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால் குறித்த தொகுதி பணிப்பாளர் நாயகத்திடம் மேலதிக ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ், பரிசோதகர்களுக்கும் அறிவித்துள்ளார்.

### அரசு கூட்டமைப்பு...

தமிழர்களின் முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசாங்கத்துடன் நடத்தும் பேச்சுகளை இந்தியா வரவேற்கிறது. அதற்கு தேவையான ஆசியும்,ஒத்துழைப்பும் புதுடில்லியிடமிருந்து எப்போதும் கிடைக்கும். தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வை விரைவாகவும், அவர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் வழங்கவேண்டியதன் அவசியத்தை கொழும்புக்கு கூறியிருக்கிறோம்.

இவ்வாறு நேற்று தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் கூறியிருக்கிறார் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர்.

பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொள்ள கொழும்பு வந்துள்ள இந்திய அமைச்சர் ,இந்திய உயர்ஸ்தானிகரின் வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அதன் பேச்சாளர் சுமந்திரன் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் அண்மையில் நடந்த பேச்சு குறித்து சுமந்திரன் எம்.பி, இந்திய வெளியுறவு அமைச்சரிடம் விபரித்தார். உடனடியாக தீர்க்கப்படவேண்டிய தீர்க்கப்படக்கூடிய நான்கு விடயங்களை அரசிடம் சமர்ப்பித்துள்ளதாக கூறிய சுமந்திரன் எம்.பி அவற்றை பட்டியலிட்டார்.

அவற்றை நிதானமாக செவிமடுத்த இந்திய அமைச்சர், தாம் காலையில் ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பில் இதே விடயங்கள் பிசகாமல் சொல்லப்பட்டனவென்றும், இதன்மூலம் அரசும், கூட்டமைப்பும் நடத்தும் பேச்சில் புரிந்துணர்வு இருப்பதை தாம் காண்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் நீங்கள் பேச வேண்டும். இது தொடரவேண்டும். அப்போதே சில விடயங்களுக்கு தீர்வைக் காண முடியும். தமிழர் பிரச்சினை விடயத்தில் நீங்கள் உங்கள் நிலைப்பாட்டில் இருந்துகொண்டு பேசுங்கள். இந்தியாவும் அதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கும். புதிய அரசியலமைப்பு வரும்போது உங்களின் யோசனைகளை முன்வையுங்கள். அப்போது சில விடயங்களை சேர்க்கலாம். அதற்கு முதல் நீங்கள் ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வை காண வேண்டும். இந்தியா எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டிருக்கிறது. தேவையான நேரத்தில் எமது ஆலோசனைகளையும் வழங்குவோம் என்று இதன்போது குறிப்பிட்டுள்ளார் ஜெய்ஷங்கர் .

### அதிக விலைக்கு...

பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தேகநபர்களிடமிருந்து 12.5 கிலோகிராம் நிறையுடைய 20 சமையல் எரிவாயு சிலிண்டர்களும் 5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரொன்றும் கைப்பற்றப்பட்டதாக பிலியந்தலை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலைக்கு மேலதிகமாக 500 ரூபா அதிக விலைக்கு சமையல் எரிவாயுவை விற்பனை செய்வதாக பிலியந்தலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சனத் ரஞ்சித்துக்கு கிடைத்த தகவலுக்கமைய, குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தினேஷ் ஹெட்டியாராச்சி உள்ளிட்ட குழுவினர் சுற்றிவளைப்பை முன்னெடுத்துள்ளனர்.

விஸ்வனகலாவ பிரதேசத்திலுள்ள எரிவாயு விற்பனை முகவரொருவரிடமிருந்து எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொண்டு, அதே விற்பனை முகவர் நிலையத்துக்கு முன்பாக இந்த சிறியளவிலான வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுற்றிவளைப்பை முன்னெடுத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்ட இடத்திலிருந்து எரிவாயு சிலிண்டர்களுக்கு மேலதிகமாக, சந்தேகநபர்களின் வீடுகளிலிருந்து மேலும் ஐந்து எரிவாயு சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### ரணிலுக்கு...

பொருத்தமானவர் தற்போது அந்தப் பதவியை வகித்து வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (28) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, புதிய பிரதமர் மற்றும் தேசிய அரசாங்கம் தொடர்பான செய்திகள் குறித்து வினவியபோதே அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன மற்றும் செயலாளர் சாகர காரியவசம் ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

இது குறித்து அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன பதிலளிக்கையில்,

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமிப்பதற்கு தமது கட்சியில் உள்ள எவருக்கும் மூளையில் பிரச்சினை இருப்பதாக தெரியவில்லை.

நாட்டில் முதன்மையான மற்றும் பழைமையான கட்சியாகவும் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி பெரும் போராட்டத்திற்கு மத்தியில் ஒரு ஆசனத்தை மாத்திரம் பெற்றுக்கொள்ளும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலுள்ள கட்சியின் உறுப்பினரான ரணில் விக்ரமசிங்கவை நாங்கள் பிரதமராக்குவதற்கு எவ்வித தேவையுமில்லை.

சர்வகட்சி மாநாட்டை நடத்தியது தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கல்ல. பிரச்சினைகள் ஏற்படும்போது எங்களையும் அழைக்குமாறு நாடாளுமன்றத்திற்கும் அதற்கு வெளியிலும் கூறப்பட்டமையினாலேயே ஜனாதிபதியினால் சர்வகட்சி மாநாடு நடத்தப்பட்டது. மாறாக, தேசிய அரசாங்கம் அமைக்கும் அளவிற்கு நாங்கள் தோல்வியடையவில்லை – என்றார்.

இது குறித்து செயலாளர் சாகர காரியவசம் பதிலளிக்கையில்,

இலங்கையில் பிரதமர் பதவியை வகிப்பதற்கு தகுதியான ஒருவரே தற்போது அப்பதவியில் இருக்கின்றார். இந்த நிலையில் நாங்கள் மற்றொருவருக்கு பிரதமர் பதவியை வழங்குவது குறித்து சிந்திக்க வேண்டிய தேவை இல்லை என்றார்.

### அரசை வீட்டுக்கு...

கோரியும் போராடினர்.

ஆனால், இன்று (29) ஆரம்பிக்கப்படுவது இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் போராட்டமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் இந்த பாரிய போராட்டம் பொலனறுவை சிறுநீரக வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு, பிற்பகல் 2 மணிக்கு பராக்கிரம சமுத்திரத்திற்கு முன்பாக பாரிய கூட்டமொன்றும் இடம்பெறும். இதில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொள்ளவுள்ளார்.

வாக்காளர்களில் பெரும்பாலானோர் விவசாயிகளாகும் என்பதால் அரசாங்கம் தொடர்பான தீர்மானங்களை அவர்களே எடுப்பார்கள் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நெல், மரக்கறி, பழவகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் அனைத்து விவசாயிகளும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்காக இந்த அரசாங்கம் எதனையும் இனிசெய்யாது என்பதால் இந்தஅரசைஉடனடியாக வீட்டுக்கு அனுப்புவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

### சர்வதேச நாணய...

அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

ஜூலி சங் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையில் நேற்று (28) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் திருமதி விக்டோரியா நூலண்ட் (Victoria Nuland) இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பை தூதுவர் பாராட்டினார்.

அண்மைக்காலமாக இலங்கைப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களை விளக்கிய ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தை அணுகும் விடயத்தில் அமெரிக்காவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை பாராட்டிய ஜூலி சங், இது நீண்டகால அடிப்படையில் இந்நாட்டுக்கு முக்கியமானதொன்றாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

எந்தவித பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி இங்கு தெரிவித்தார். ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமெரிக்க தூதரகத்தின் பிரதித் தூதுவர் மார்ட்டின் கெலீ (Martin Kelly), அரசியல் மற்றும் பொருளாதார ஆலோசகர் சூசன் வோல்கே (Susan Walke) ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

### மாணவர்களை...

கூட்டிச்சென்ற சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்திலுள்ள கோளாவில் பாடசாலையில் கல்விகற்றுவரும் 3 மாணவர்கள் கடத்தி செல்லப்பட்டதாக வதந்தி பரப்பப்பட்டதையடுத்து, வீடுகளில் உள்ள பெற்றோர்கள் வீடுகளை விட்டு பதற்றத்துடன் வெளியேறி அவசர அவசரமாக பாடசாலைகளை நோக்கிச்சென்று பாடசாலையை முற்றுகையிட்டு தமது பிள்ளைகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரினர்.

இதனையடுத்து, அந்தப் பகுதியில் சில மணிநேரம் பதற்றம் ஏற்பட்டதுடன் பாடசாலையில் இருந்து எந்த மாணவர்களும் பாடசாலையை விட்டு வெளியேறவில்லை. அவர்களுக்கு 3ஆம் தவணைப் பரீட்சை இடம்பெறுகின்றது. எவரும் கடத்தப்படவில்லை என பாடசாலையை முற்றுகையிட்ட பெற்றோருக்கு தெளிவூட்டி இது ஒரு வதந்தி. எனவே பெற்றோர் பதற்றப்படவேண்டாம் என தெரிவித்தனர்.

இதன் பின்னர் பெற்றோர் ஆறுதல் அடைந்தாலும் பாடசாலை முடியும்வரை அங்கு காத்திருந்து தமது பிள்ளைகளை கூட்டிச் சென்றனர்.

இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பணக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே கொள்ளையர்கள் கொள்ளையிடுவதற்காக இவ்வாறான வதந்தியை பரப்பிவிட்டு பொதுமக்கள் அது தொடர்பாக பதற்றத்துடன் வீடுளை பூட்டாது அவசரத்தில் வீட்டை விட்டு வெளியேறும்போது அங்கிருந்து கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருக்க அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என பாதுகாப்பு தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

எனவே, பொதுமக்கள் அதிக விழிப்புடன் செயற்படுமாறும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் பொலிஸாரை தொடர்புகொள்ளுமாறும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### எரிபொருள் வாங்க...

மீட்கப்பட்டதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துருகிரிய, போரே, கல்பொத்த வீதி பிரதேசத்தைச் சேர்ந்த 85 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இவ்வாறு உயிரிழந்த நபர் கடந்த 26ஆம் திகதி காலை 8.30 மணியளவில் அத்துருகிரிய நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு, எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக வேனில் சென்றுள்ளார். இந்நிலையில், சிறிது நேரம் வாகனம் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து நகராமையினால் சுற்றியிருந்தவர்கள் வாகனத்தை பரிசோதித்துள்ளனர். அதன்போது குறித்த நபர் அவரின் வாகனத்துக்குள்ளேயே மயக்கமடைந்த நிலையில் இருந்துள்ளார்.

அதன் பின்னர் அருகிலிருந்த சுவசெரிய வாகனத்தினூடாக அழைத்துச் செல்லப்பட்டு, சிகிச்சைக்காக அத்துருகிரிய மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனைகளில் அவர் உயிரிழந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் நோயாளி என்பது, அவரின் உறவினர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் அத்துருகிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ்ப்பாண பண்பாட்டு மையம் வைபவ ரீதியாக திறந்துவைப்பு






(யாழ். செய்தியாளர்)

இலங்கை - இந்திய நட்புறவின் சின்னமாக இந்திய அரசின் 1.6 பில்லியன் ரூபா நிதியுதவியில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் நேற்று (28) வைபவ ரீதியில் திறந்து வைக்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கர் ஆகியோரால் நண்பகல் ஒரு மணியளவில் காணொளி ஊடாக திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வியமைச்சர் தினேஸ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்டனர். யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். மாநகர முதல்வர் வீ. மணிவண்ணன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். இதன்போது பல கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கர், நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவை கொழும்பில் சந்தித்து நேற்று (28) கலந்துரையாடினார். இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

# உக்ரைன் பிரஜைகள் காலியில் போராட்டம்



(எம்.எம். ஜெஸ்மின்)

உக்ரைன் நாட்டைச் சேர்ந்த உல்லாசப் பயணிகள் சிலர் நேற்று முன்தினம் ரஷ்யாவிற்கு எதிராக காலி கோட்டையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ரஷ்யாவிற்கு எதிராக சுலோகங்களை ஏந்திய வண்ணமும் கோசங்களை எழுப்பியவாறும் யுத்தத்தை மிக விரைவில் முடிவிற்கு கொண்டு வருமாறும் காலி கோட்டையை சுற்றியவாறு அவர்கள் ஊர்வலமாக சென்றனர்.

# மோட்டார் சைக்கிள் குழு அக்கரைப்பற்றில் அட்டகாசம்

## பாடசாலை மாணவர்களை பின்தொடர்ந்து தொல்லை

(கனகராசா சரவணன்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேசங்களில் பாடசாலைக்கு மற்றும் தனியார் வகுப்புகளுக்கு வீதியில் செல்லும் மாணவர்களுக்கு இளைஞர் குழுவினர் மோட்டார்சைக்கிளில் பின்தொடர்ந்து பெரும் தொல்லை கொடுத்து வருவதாக பொதுமக்களிடமிருந்து அதிகளவான முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசங்களில் பாடசாலை முடியும் வேளையிலும் மாலையில் தனியார் வகுப்புகளுக்கு செல்லும் வேளையிலும் மாணவர்கள், மோட்டார் சைக்கிளில் வரும் குழுவினரால் அச்சுறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு தொல்லை கொடுத்துவரும் இளைஞர் குழுவினர் வெளிமாவட்ட வாகன விற்பனை நிலையங்களில் இருந்து மோட்டார் சைக்கிள்களை வாங்கிக்கொண்டுவந்துள்ளதுடன் அதன் உரிமையாளர் பத்திரத்தை மாற்றாது சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முகக்கவசம் அணியாது இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருவதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இதனால் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையை மேற்கொள்ளமுடியாது பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இவ்வாறு மாணவர்களுக்கு தொல்லை கொடுத்துவரும் இளைஞர் குழுவினரை கண்டறிந்து கைது செய்து இவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட ரீதியான கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# காலாவதியான பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

நுகர்வோரால் பயன்படுத்த முடியாத, பொருத்தமற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்வோர் தொடர்பில் உணவு சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பு நகரத்தில் உணவுப் பொருட்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கை ஏப்ரல் 16ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என்று தலைமை வைத்திய அதிகாரி ருவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

காலாவதியான, தரம் குறைந்த பொருட்கள் மற்றும் மனித பாவனைக்கு பொருத்தமற்ற பொருட்கள் சந்தைக்கு வரக்கூடும் என்பதினால் கொள்வனவு செய்யப்படும் பானங்கள் தொடர்பில் அதில் குறிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கலப்படம் செய்யப்பட்ட பலசரக்கு வகைகள் சந்தையில் இருக்கக்கூடும் என்பதால், அவற்றை கொள்வனவு செய்யும்பொழுது அதன் மனம், நிறம் உள்ளிட்ட விடயங்களில் பொது மக்கள் அவதானம் வெலுத்த வேண்டும். இந்த நடவடிக்கைக்காக 49 பரிசோதகர்கள் மற்றும் 6 வைத்திய அதிகாரிகள் உள்ளடக்கிய குழு நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

இதேவேளை, இவ்வாறான பொருட்கள் தொடர்பில் வியாபாரிகளும் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



தமக்கு உரிய பாதுகாப்பு வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்க கால்நடை மருத்துவர்கள் சங்கத்தினர் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று (28) ஆர்ப்பாட்டம் செய்ததுடன் ஜனாதிபதி செயலகம் வரை பேரணியாக சென்றனர். (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)



தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்றால், தமிழ் கட்சிகள் அரசியல் தலைவர்கள் அரசுக்கு முண்டு கொடுக்க வேண்டாம். அழுத்தம் கொடுங்கள் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டபாய 2 ஆண்டுகள் 4 மாதங்கள் முடிவடைந்த பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார். புதிய நிபுணர் குழு அறிக்கை வெளிவந்திருப்பதாகவும், மொழிபெயர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகின்ற போதிலும் அது பற்றிய கலந்துரையாடல் நடத்தாமல், இடைக்காலப் பிரச்சினைகளை தீர்ப்பதாகவும் கோட்டாபய தெரிவித்துள்ளார். அரசியல் கைதிகளின் விடுதலையை மறுத்து, பயங்கரவாத தடைச் சட்டங்களை மீளப்பெறும்படி வலியுறுத்தியும் இன்றுவரை ஒன்றும் நடைபெறவில்லை. நீதிமன்றத்தால் எந்தவொரு தண்டனையும் விதிக்கப்படாதவர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பை வழங்க முடியும். ஆனால், தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் ஒன்றும் நடைபெறவில்லை. சிங்களத் தலைவர்கள் நாடகமாடுகிறார்கள். என்ன தெரிவிப்பதாக இருந்தாலும் சர்வதேச மத்தியஸ்தர்கள் முன்னிலையில் பேசுங்கள். எந்தந்த இடங்களில் தீர்மானங்களை எடுத்தார்களோ, அதற்கேற்ப வர்த்தமானி அறிக்கையினை வெளியிட வேண்டும். இலங்கையின் அரசியலமைப்பிலுள்ள 20 சாசனங்களுக்கும், இலங்கை அரசாங்கம் தீர்வினைப் பெற்றுத்தராது. ஆகவே, சர்வதேச அழுத்தத்தினால்தான் இதற்கு முடிவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

காணாமலாக்கப்பட்டோர் விடயம் உட்பட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு, தமிழ்க் கட்சிகள் அரசுக்கு முண்டு கொடுக்க வேண்டாம், அழுத்தம் கொடுங்கள்" என்றார் சிவாஜிலிங்கம்.

சிவாஜிலிங்கம் சொல்வதிலும் ஒரு நியாயம் இருக்கிறது. இலங்கை ஆட்சியாளர்களின் வரலாற்றை, கடந்த கால செயற்பாடுகளை நோக்குகையில் அவர்களின் வாக்குறுதிகளை நம்பிவிட முடியாது. எழுத்துமூல உத்தரவாதமொன்றைத் தந்தாலொழிய அல்லது சர்வதேச நாடொன்றின் முன்னிலையில் ஒப்புதல் வழங்கினாலொழிய இலங்கையின் வாக்குறுதிகளை இலகுவில் நம்பிவிட முடியாது.

1948 ஆம் ஆண்டு பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து, தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களிடமிருந்தும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைக் கோரி வருகின்றனர். தமிழ்பேசும் மக்களின் அரசியல் தலைமையானது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளின்படி அவர்களின் நியாயமான அபிலாஷைகளை அங்கீகரித்து ஒரு தீர்வைக் கோரியது. தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு உள்நாட்டிலும் சர்வதேசத்தின் உதவியோடும் தீர்வு காண பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இன்றுவரை தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987, ஜூலை 29 இல் கைச்சாத்திடப்பட்டது . அதன் பின்னர் இலங்கை அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு, மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வைக் கருதிய முறைமையாக மாகாண சபை முறைமை நிறுவப்பட்டது. ஆனால், இந்தத் திருத்தம் ஓர் ஒற்றையாட்சி அரசியலமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அதிகாரப்பகிர்வுக்கு பதிலாக ஓர் அதிகாரப்பரவலாக்க நடவடிக்கையாக அமைந்தது


தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மார்ச் 29ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை


# சிவாஜிலிங்கத்தின் கருத்தில் உள்ள நியாயம்

இந்தப் பின்னணியில்தான் அதன்பின் எடுக்கப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் சமஷ்டி கட்டமைப்பை நோக்கி 13ஆவது திருத்தத்தை மிஞ்சும் திசையில் நகர்ந்தது.

முதலாவதாக, 1993 இல், ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் காலத்தில் மங்கள முனசிங்க தெரிவுக்குழு இந்திய முறைமை (மாதிரி) யின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வைப் பரிந்துரைத்தது. சமகாலப் பட்டியல் (CONCURRENT) நீக்கப்பட வேண்டும் அல்லது அதிலுள்ள பெரும்பாலான விடயங்கள் மாகாணப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளை இணைக்கும் உயர்மட்ட சபையை முன்மொழிந்தது.

இரண்டாவதாக, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நிர்வாகத்தின் கீழ் 1995 மற்றும் 1997 இல் அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான அரசாங்க முன்மொழிவுகள் மற்றும் 2000 இன் அரசியலமைப்பு சட்டமூலம் என அனைத்தும் விரிவான அதிகாரப் பகிர்வை முன்மொழிந்திருந்ததுடன், ஒற்றையாட்சி கட்டமைப்பைக் கைவிட்டன.

மூன்றாவதாக, 2002 டிசம்பரில், ஒஸ்லோவில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்தப் பேச்சுகளின்போது, ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி கட்டமைப்பின் அடிப்படையில் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்களில் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தீர்வை ஆராய்வதற்கு கட்சிகள் ஒப்புக்கொண்டன.

இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை தாங்கிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இந்த உடன்படிக்கையை எட்டிய பின்னர், செய்தியாளர் சந்திப்பில் பின்வருமாறு கூறினார்: விடுதலைப் புலிகளின் தலைமையின் முன்மொழிவுக்குப் பதிலளித்த கட்சிகள், கொள்கையின் அடிப்படையில் நிறுவப்பட்ட தீர்வை ஆராய ஒப்புக்கொண்டன. ஐக்கிய இலங்கைக்குள் ஒரு சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்களில் உள்ளக சுயநிர்ணய உரிமை மற்றும் தீர்வு அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை கட்சிகள் ஒப்புக்கொண்டன. இதன் அடிப்படையில் மேலும் விடயங்களை விவாதிக்க கட்சிகள் இணங்கிக்கொண்டன.

நான்காவதாக, 2006இல், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனைத்துக் கட்சிப் பிரதிநிதித்துவக் குழுவையும் (ஏ.பி.ஆர்.சி.) புதிய அரசியலமைப்புக்கான முன்மொழிவுகளை உருவாக்க நிபுணர்கள் குழுவையும் நியமித்தார். அதன் ஆரம்பக் கூட்டத்தில், ஜனாதிபதி ராஜபக்ஷ குழுவின் பணியை பின்வருமாறு கோடிட்டுக் காட்டினார்: பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கையிலிருந்து கடந்த கால முயற்சிகளை நாம் ஆராய வேண்டும்.

இறுதியாக, 2009 இல் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கும் கட்டியெழுப்புவதற்கும் அரசாங்கம் சில உறுதிமொழிகளை வழங்கியது.

26 மே 2009 அன்று வருகை தந்த ஐ.நா பொதுச்செயலாளர் பான் கீ மூனுடன் ஜனாதிபதி ராஜபக்ஷ ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டார்:

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதுடன், புதிய சூழ்நிலையில் தமிழ்க் கட்சிகள் உட்பட அனைத்து தரப்பினருடனும் பரந்தளவிலான உரையாடலை தொடங்குவதற்கும், இந்த செயல்முறையை மேலும் மேம்படுத்துவதற்கும், இலங்கையில் அபிவிருத்தி மற்றும் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் ஜனாதிபதி ராஜபக்ஷ தனது உறுதியான தீர்மானத்தை வெளிப்படுத்தினார்.

அடுத்த நாள் 2009 , மே 27, அன்று, ஐ.நா மனித உரிமைகள்பேரவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது, அதில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் மேற்கூறிய உறுதிமொழி பின்வரும் வார்த்தைகளில் இணைக்கப்பட்டது:

"இராணுவத் தீர்வை இறுதித் தீர்வாகக் கருதவில்லை என இலங்கை ஜனாதிபதி அண்மையில் வழங்கிய உறுதிமொழியையும், அத்துடன் நிரந்தர சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவதன் மூலம் அரசியல் தீர்வொன்றை மேற்கொள்வதற்கான அவரது அர்ப்பணிப்பையும் வரவேற்கிறேன்.." என்று சொல்லப்பட்டது.

எவ்வாறாயினும், அதிகாரப்பகிர்வு மற்றும் தமிழ்மொழிக்கான சம அந்தஸ்து தொடர்பாக அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இலங்கையில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தவறியமை மட்டுமல்லாமல், மாகாணங்களிலிருந்து அதிகாரங்களையும், நிறுவனங்களையும் ஒருதலைப்பட்சமாக மீட்டெடுத்துள்ளன. அது இன்றுவரை தொடர்கிறது.

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும்இ 1987 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தின் அனைத்துப் பிரிவினரும் வழங்கிய தெளிவான உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதுடன், தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்ட, பிரிக்கப்படாத நாட்டில் தமது வரலாற்றுபூர்வ வாழ்விடப் பிரதேசங்களில் கௌரவமாகவும், சுயமரியாதையுடனும், சமாதானத்துடனும் , பாதுகாப்புடனும் வாழவும், அவர்களின் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கவும் இலங்கை அரசாங்கம் ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

எவ்வளவோ கதைகளைக் கூறிவிட்டு ஒன்றுமே தெரியாததுபோல் இருக்கும் இலங்கை ஆட்சிபீடத்தை, இலகுவில் நம்பிவிடக்கூடாதென்ற சிவாஜிலிங்கத்தின் கருத்து நியாயமானதே.



# தெற்காசியாவின் வறிய நாடாக மாறிவரும் இலங்கை

இலங்கையில் நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக்கொண்டே வருகிறது. டொலருக்கான பெறுமதி கூடிக்கொண்டே வருகையில், இலங்கை ரூபாவின் மதிப்பு குறைந்துகொண்டே வருவதோடு, நாட்டின் வெளிநாட்டு நிதிப் பிரிவு நெடுங்காலமாகச் சரிவைச் சந்தித்துவருகிறது. அதனால், இலங்கையின் வெளிநாட்டுக் கடன்கள் அதிகரித்ததற்கு ஏற்றுமதிச் செலவுக்கும், இறக்குமதிச் செலவுக்கும் இடையே பாரிய வேறுபாட்டையும் முக்கியக் காரணமாகக் குறிப்பிடலாம். இதனால், 500 கோடி டாலர்களுக்கும் அதிகமான நஷ்டம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளதாகப் பொருளாதார வல்லுநர்கள் கணித்திருக்கிறார்கள்.

இவ்வளவு சரிவுகளைச் சந்தித்துக்கொண்டிருந்த போதிலும், கடந்த மாதம் வரை இலங்கை மத்திய வங்கி, ஒரு டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை 202 ஆகவே தொடர்ந்து பேணுவதாகவும், எந்தக் காரணத்துக்காகவும் அதை மாற்றப்போவதில்லை என்றும் அறிவித்தது. அந்தக் காலகட்டத்தில் ஒரு டொலரின் பெறுமதி இலங்கை மத்திய வங்கியில் 202 ஆக இருந்தபோது, கறுப்புச் சந்தையில் ஒரு டொலருக்கு 240 ரூபாயைப் பெற்றுக்கொண்டிருந்ததும் நடந்தது. அதனால், மக்களும், வர்த்தக நிறுவனங்களும் தம்மிடமிருந்த டொலர்களை மாற்றுவதற்குக் கறுப்புச் சந்தையை நாடினர். தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கியில் டொலர் தட்டுப்பாடு அதிகரிக்கத் தொடங்கியது. மத்திய வங்கியானது சந்தைப் போக்குகளைக் கண்டறிந்து, அதற்கேற்ப டொலரின் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு அப்போதே அனுமதித்திருந்தால், ரூபாயின் பெறுமதி இந்த அளவு வீழ்ச்சியடைந்திருக்காது. இலங்கை மத்திய வங்கிக்குத் தொலைநோக்குப் பார்வை இல்லை என்பதையே இது வெளிப்படுத்துகிறது.

இன்று ஒரு டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 300 ஐக் கடந்துள்ளது. ஆகவே, இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை நாளுக்கு நாள் படுவேகமாக, பல மடங்கு அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அவ்வாறே, இலங்கை அரசாங்கம் மீளச் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்களின் ரூபா பெறுமதியும் அதிகரித்துவருகிறது. இவ்வாறான அதிகரிப்புகள் அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திலும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இந்தச் சுமைகள் அனைத்தையும், தொலைநோக்குப் பார்வையற்ற அரசாங்கத்தின் பொருளாதார நிர்வாகக் குறைபாட்டின் பிரதிபலனையும் பொதுமக்கள்தான் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

தற்போதைய அரசாங்கம் 2019இல் ஆட்சிக்கு வந்தபோதே பொருளாதார ஸ்திரமின்மைக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியிருந்தன. அப்போதே அரசாங்கம் தீர்க்கமானதும், சரியானதுமான முடிவுகளை எடுத்திருந்தால், இந்த அளவுக்குப் பாரிய பொருளாதார நெருக்கடியை இலங்கை சந்தித்திருக்காது.

தற்போது அரசாங்கம் தனது கையிருப்பில் உள்ளதாகக் காண்பிக்கும் டொலர்கள் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்தொகை களாகவே இருக்கின்றன எனும்போது இதன் பாரதூரம் விளங்கும். தெற்காசியாவில் இவ்வாறானதொரு நெருக் கடியை எதிர் கொண்டிருக்கும் ஒரே நாடு இலங்கைதான். ஏனைய நாடுகள் இக்காலகட்டத்தில் தமது டொலர் கையிருப்பு, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் அதிகரிப்பைக் காண்பித்திருக்கின்றன. அந்த நாடுகள் அனைத்தும் பொருளாதாரத்தைச் சரியான முறையில் நிர்வகிப்பதால்தான் இந்த அளவு வளர்ச்சியை அடைந்திருக்கின்றன.



இலங்கை அரசாங்கம் தற்போதும் தொடர்ந்து ரூபாவை அச்சிட்டுவருகிறது. இதனால் பணவீக்கம் 18 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த ஒரு வருட காலத்துக்குள் மட்டும் அனைத்து உணவுப் பொருட்களின் விலையும் குறைந்தது 25 வீதம் அதிகரித்துள்ளது. தொடர்ந்து ரூபா அச்சிடப்படுவதும் இவ்வாறான விலை அதிகரிப்புக்கு ஒரு காரணமாகும். கடந்த இரு வருடங்களில் மாத்திரம், இலங்கை மத்திய வங்கி 3,000 பில்லியன் ரூபா தாள்களை அச்சிட்டுள்ளது. இவ்வாறாகப் பண விநியோகம் அதிகரிக்கும்போது, பணவீக்கம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இந்த வருடம் ஜூலை மாதத்துக்குள் அரசாங்கம் கொடுத்துத் தீர்க்க வேண்டிய வெளிநாட்டுக் கடன்கள் பல உள்ளன. அத்தியாவசிய பொருட்களை வாங்க இலங்கை, இந்தியா விடமிருந்து தொடர்ந்து கடன் வாங்கி வருகின்றபோதிலும், அதைத் தொடர்ந்தும் செய்வது மேலும் பொருளாதாரச் சீர்குலைவுக்கே வழியமைக்கும்.

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார நிர்வாகத் திறனிலுள்ள குறைபாடுகளால்தான் தற்போதைய நெருக்கடி நிலை வந்திருப்பதை இப்போதாவது அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறான நிலை ஏற்படும் என்று அப்போதே எச்சரித்த சர்வதேசக் கடன் தரநிர்ணய நிறுவனங்களின் எச்சரிக்கையை 'அவை மேற்கத்திய நாடுகளின் சதி' என்று எளிதாகக் கூறி, அப்போது புறக்கணித்தது இலங்கை அரசாங்கம். அன்று அந்த எச்சரிக்கைகளைப் புறந்தள்ளியதால், இன்று ஒவ்வொரு வெளிநாடாகக் கையேந்திப் பெறும் கடன் தொகையில், தமது அன்றாடத் தேவைகளுக்காக எரிபொருட்களையும், மருந்துகளையும், உணவுப் பொருட்களையும் அரசாங்கம் தரும்வரை நாட்டிலுள்ள மக்கள் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மின்சாரத் தடையால் இருளுக்குள் மூழ்கியுள்ளது. குடிநீர் விநியோகமும் தடைப்பட்டிருக்கிறது. உணவுப் பொருட்கள், மருந்துகள், பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு சிலிண்டர் வரிசைகளில் மக்கள் இரவு பகலாகக் காத்திருக்கிறார்கள். பலர் வரிசையிலேயே நின்று மயங்கி விழுந்து இறந்திருக்கிறார்கள். உயிர் பிழைக்க பலரும் இந்தியாவுக்குப் படகில் போய்க்கொண்டிருக்கிறார்கள்.


இவ்வாறு பொருளாதார நெருக்கடியில் நாடு பற்றி எரிந்துகொண்டிருக்கையில் ஜனாதிபதி, இந்த நெருக்கடிக்குக் காரணம் தானோ, தனது அரசாங்கமோ அல்ல என்று உரையாற்றிவிட்டு, மறு தினமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான விலையையும், நீர், மின்சார, தொலைபேசிக் கட்டணங் களையும், பஸ், புகையிரதக் கட்டணங் களையும் அதிகரித்துள்ளார். பொதுமக்கள் இந்த அளவுக்குக் கஷ்டப்படும்போது, ஜனாதிபதியின் குடும்பமும், அமைச்சர் களும் சகலவிதமான வரப்பிரசாதங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் இந்தப் பொறுப்பற்ற தன்மையால் தற்போதைய பொருளாதார நெருக்கடியானது, விரைவில் மிக உக்கிரமான சமூக நெருக்கடியாக மாறுவது உறுதி. இப்போதே பல தொழிற்சாலைகளும், வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன. பலரும் வேலைவாய்ப்புகளை இழந்துள்ளார்கள். செல்வந்தர் - ஏழை என்ற பாரபட்சமின்றி, அனைவரது வீடுகளிலும் வறுமையும், பட்டினியும் கோலோச்சிக்கொண்டிருக்கின்றன.

இந்த சமூக நெருக்கடி வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கும். ஆப்பிரிக்க வறிய நாடுகளில் உணவுக்காக அடித்துக் கொள்வது, திருடுவது, கொள்ளையடிப்பது போன்ற குற்றச் செயல்கள் இலங்கையிலும் ஏற்படக் கூடிய காலம் வெகுதூரத்தில் இல்லை. ஆகவே, சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை செல்வதுதான் தற்போதைய பொருளாதார நிலைமையை சரியான பாதையில் கொண்டுசெல்ல உதவும். சர்வதேச நாணய நிதியமானது, அரசாங்கச் செலவுகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து, கடன் மேலாண்மையையும், நிதி நிர்வாகத்தையும் ஒழுங்காகச் செய்யும். இலங்கை மக்கள் தற்போதைய ஒரே நம்பிக்கையாக அதைத்தான் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

**- எம்.ரிஷான் ஷெரீப், ஊடகர், நன்றி - இந்து**

## தவக்கால சிந்தனை



### நலம் பெற விரும்புகிறீரா?

இன்றைய நற்செய்தி வாசகம் இயேசுவின் நலமளிக்கும் பணியின் முகாமையான ஓர் அம்சத்தைச் சுட்டிக்காட்டுகிறது. நலமற்ற மனிதரிடம் நலம்பெற வேண்டும் என்னும் விருப்பம், ஆர்வம், அதற்கேற்ற நம்பிக்கை இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்த பின்னரே, அந்த மனிதரைக் குணமாக்க முன் வருகிறார் இயேசு.

இந்த வாசகத்திலும் "நலம் பெற விரும்புகிறீரா?" என்று அந்த மனிதரிடம் வினவி, அவருடைய விருப்பத்தையும், நம்பிக்கையையும் அறிந்த பின்னர் அவரைக் குணப்படுத்துகிறார். இத்தவக்காலத்தில் நாம் நலம் பெற விரும்புகிறோமா, மனமாற்றமடைய விரும்புகிறோமா என்று நம்மையே கேட்டுக்கொள்வோம். மனமாற்றத்திற்கான அடிப்படை ஆர்வமோ, விருப்பமோ இல்லாவிட்டால், மனமாற்றத்தை இறைவன் எப்படித் தருவார்? நாம் விரும்புவோம். நம் விருப்பத்தை அறிக்கையிடுவோம்.

## இன்றைய நாளில்...

- 1807 – 4 வெஸ்டா என்ற இதுவரை அறிந்தவற்றில் மிக வெளிச்சமான சிறுகோளை ஜேர்மனிய வானியலாளர் ஐஎன்ரிக் ஒல்பர்ஸ் கண்டுபிடித்தார்.
- 1974 – நாசாவின் மரைனர்-10 விண்ணுளவி, புதன் கோளை அண்மித்த முதலாவது விண்கலம் என்ற பெயரைப் பெற்றது.
- 1974 – சீனாவின் சென்சி மாகாணத்தில் சுடுமட்சிலைப்படை சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 2007 – கணிதத்துக்காக வழங்கப்படும் நோர்வே நாட்டின் நோபல் பரிசு, தமிழரான சீனிவாச வரதனுக்கு அறிவிக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

டயஸ்போராவினால்தான் பிரச்சினை எண்டு சொன்ன ஆட்சியாளர்கள் இப்போ நாட்டுப் பிரச்சினை தீர டயஸ்போரா உதவவேண்டும் என்றாங்கள்..! வாழ்க்கை ஒரு வட்டம் பாருங்கோ..!!



# சர்வதேச நாணய நிதிய அறிக்கைக்கு அரசாங்கம் ஒற்றைக் காகிதத்தில் பதில்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



இலங்கை நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக மிகச்சிறந்த, ஆதாரபூர்வமான 94 பக்கங்களைக் கொண்ட நீண்ட அறிக்கையொன்றை சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசாங்கம் அதற்கான பதிலை ஒற்றைக் காகிதத்தில் வழங்கியுள்ளதாக குற்றஞ்சுமத்தியுள்ளார்.

நாட்டை கட்டியெழுப்புதல் மற்றும் சர்வதேச ரீதியாக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடல் தொடர்பாக அரசு கொண்டுள்ள அறிவின் தரம் இதன் மூலமாக மிகத் தெளிவாக உறுதிப்படுத்தப்படுவதாக தெரிவித்த அவர் இராஜதந்திர கொடுக்கல் வாங்கல்களில் நாடு துரதிர்ஷ்டமான நிலைமையை எதிர்நோக்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சூரியவெவ பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சுபக பிரதீப் ஏற்பாடு செய்திருந்த சூரியவெவ வியாபார பிரதிநிதிகளுடனான சந்திப்பில் நேற்று முன்தினம் (27) கலந்து கொண்ட வேளையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாயமாக இருந்தாலும் மூடநம்பிக்கைகளை விடவும் அறிவியலுக்கு முன்னுரிமை வழங்குவது மிக முக்கியமானது என்றும் நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் 11 வருட காலமாக ஆய்வின் முடிவானது சேதனப் பசளை மாத்திரம் பயன்படுத்துவதால் விளைச்சலானது மிக மோசமாக குறையக்கூடும் என சுட்டிக்காட்டினார்.

இன்று சர்வதேச ரீதியாக கடன் தொகை ஒன்றையேனும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழந்துள்ளமையானது தரவரிசையில் இலங்கை பின்தள்ளப்பட்டிருப்பதன் விளைவாகும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இன்று எமது நாடு முகம் கொடுப்பது அதன் பிரதிபலனையே ஆகும் என அவர் தெரிவித்தார்.

இலங்கை நாடானது கடன் தொடர்பில் சர்வதேச ரீதியாக நம்பகத்தன்மையை கட்டியெழுப்புவதில் தோல்வியடைந்துள்ளதாக தெரிவித்த எதிர்க் கட்சித்தலைவர், நாட்டை ஏலத்தில் விடும் கொள்கையையே இந்த அரசாங்கம் செயல்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை நாடானது டொலர்களை பெற்றுக் கொள்ளும் அனைத்து விதமான வாயில்களும் மூடப்பட்ட நிலைமையில் காணப்படுவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதனால் இலங்கை நாடு மிகப் பாரிய டொலர் பிரச்சினையில் சிக்குண்டு மூழ்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

## 28.03.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 104 8474 | 115 2271 |
| கனேடியன் டொலர் | 12 8150 | 130 888 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 34 0530 | 36 1647 |
| யூரோ | 208 4 40 | 22 6438 |
| ஜப்பான் யென் | 1 2420 | 1 343 |
| சிங்கப்பூர் டொலர் | 102 7 6 | 110 1383 |
| ஸ்ரேலிங் பவுன் | 27 5562 | 284 662 |
| சுவிஸ் பிராங் | 2 8 5187 | 211 4 57 |
| ஐ.அ.டொலர் | 177 6364 | 187 8847 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 671 2680 |
| குவைட் | குவைட் தினார் | 858 626 |
| ஓமான் | ஓமான் றியால் | 655 072 |
| கட்டார் | கட்டார் றியால் | 7 42 7 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 67 5262 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 7 20 4 |

# பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படும்

## இறக்குமதியாளர்கள் சங்கம் நம்பிக்கை

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பொது மக்களுக்கு தட்டுப்பாடு இன்றி அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வோரின் சங்கம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 05 மற்றும் 06ஆம் திகதிகளுக்கு பின்னர் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை எந்தவித தட்டுப்பாடும் இன்றி வழங்கக்கூடியதாக இருக்கும் என்று சங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் இந்திய கடனுதவியின் கீழ் துறைமுகத்தில் உள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை விரைவாக விடுவித்து பொருட்களை சந்தைக்கு விநியோகிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களில் சுமார் 50 வீதமானவை இந்தியாவில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

அரிசி, சீனி, வெங்காயம் மற்றும் மிளகாய் ஆகியவற்றைப் போன்று மேலும் சில பல சரக்கு வகைகளும் இவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்றன.

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களில் மேலும் 20 வீதமானவை அவுஸ்திரேலியா மற்றும் சீனாவில் இருந்து கொண்டுவரப்படுகின்றன.

சீனாவில் இருந்து வெள்ளைப்பூடு போன்ற பலசரக்கு பொருட்களும் கொண்டுவரப்படுகின்றன. பருப்பு வகைகள் அவுஸ்திரேலியாவில் இருந்து கொண்டுவரப்படுகின்றன.

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களில் சுமார் 30 வீதமானவை பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. இங்கிருந்து கிழங்கு மற்றும் வெங்காயம் போன்றனவும் கொண்டுவரப்படுகின்றன.

டொலரின் பெறுமதி அதிகரிக்கும்பொழுது இந்த இறக்குமதிப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கின்றன. இருப்பினும் துறைமுகத்தில் இருக்கும் கொள்கலன்களை விடுவித்தால் எதிர்காலத்தில் 175 ரூபாவிற்கு, ஒரு கிலோ சீனியை மொத்த விலையில் நுகர்வோரினால் கொள்வனவு செய்ய முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தத்துவம் தங்கராசு



இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கர் நேற்று கொழும்பிலுள்ள எரிபொருள் நிலையம் ஒன்றுக்கு சென்றார். நிலைமைகளை பார்த்தார். அநேகமாக மனதுக்குள் பரிதாபப்பட்டிருப்பார் என்று நினைக்கிறேன்.

ஒருகாலத்தில் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தில் பணியாற்றியவர் ஜெய்ஷங்கர். இலங்கையின் நிலைமை குறித்து நன்கு அறிந்தவர்...

அது இருக்கட்டும்... சாதாரண திறப்பு விழாவுக்கே ஓடும், வெளிநாட்டு பிரமுகர்களை கண்டாலே ஒட்டிக்கொள்ளும் எந்த அமைச்சர்களோ அல்லது எம்.பிக்களோ இந்திய அமைச்சருடன் எரிபொருள் நிலையத்திற்கு செல்லவில்லை. பார்த்தீர்களா? அப்படி சென்றால் யாராவது மக்கள் ஏசக் கூடும் அல்லது தாக்குதல் ஏதும் நடத்தக் கூடும். அதனால் இந்திய அமைச்சருக்கும் சேர்ந்து பாதிப்பு வந்துவிடக்கூடாதென ஒதுங்கிவிட்டார்கள் போலும்...

சரி... இந்திய வெளியுறவு அமைச்சராவது வந்துபோனாரே என்று ஆறுதல் பெறவேண்டியதுதான்...

# வேப்பங்குளம் எரிபொருள் நிலையத்தில் ஊழியர்கள் - பொதுமக்கள் முரண்பாடு






(வவுனியா செய்தியாளர்)

வவுனியா - மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் நிலையத்தில் பொதுமக்களுக்கும் எரிபொருள் நிலையத்தின் ஊழியருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

குறித்த எரிபொருள் நிலையத்திற்கு நேற்றுக் காலை 06ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் 13 ஆயிரத்து 200 லீற்றர் டீசல் தாங்கிய பவுசர் ஒன்று வருகை தந்திருந்தது. வாகனங்களுக்கு டீசல் முழுமையாக நிரப்பப்படுவதுடன் ஒரு நபருக்கு ஆயிரம் ரூபாவிற்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்த சமயத்தில் அங்கு திடீரென வந்தவர்களுக்கு எரிபொருள் நிலைய ஊழியர் மண்ணெண்ணெய் வழங்கியதாக தெரிவித்து வரிசையில் நின்ற மக்கள் எரிபொருள் நிலைய ஊழியருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் இருவருக்கிடையே வாய்த்தர்க்கம் நீடித்தது.

இதனையடுத்து அவ்விடத்திற்கு வருகைதந்த எரிபொருள் நிலையத்தின் முகாமையாளர், இடையில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படும் நபரை வெளியேற்றியதையடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

# நுவரெலியா எரிபொருள் நிலையத்தில் பதற்றம்



(செ. திவாகரன்)

நாட்டில் தொடரும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நுவரெலியா - பதுளை வீதியில் மக்கள் இறங்கி நேற்று (28) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மண்ணெண்ணெய் மற்றும் டீசல் கோரி மக்கள் நடத்திய போராட்டத்தால் நகரின் போக்குவரத்து சுமார் இரண்டு மணித்தியாலம் தடைபட்டமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா பொலிஸாரின் உதவியுடன் அத்தியாவசியத் தேவைக்காக வைக்கப்பட்டிருந்த டீசலை எரிபொருள் உரிமையாளருடன் கலந்துரையாடி வரிசையில் நின்ற வாகனங்களுக்கும், பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டது. இதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை நூலகங்களில் பத்திரிகைகள் குறைவென

## வாசகர்கள் குற்றச்சாட்டு

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள நூலகங்களில் தினசரி வரும் பத்திரிகைகள் குறைக்கப்பட்டிருப்பதாக வாசகர்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

பிரதேச சபைகள் உள்ள நூலகங்களில் சகல பத்திரிகைகளும் கொள்வனவு செய்யப்படும் நிலையில், பெரும் வருமானமீட்டும் மாநகரசபை நூலகங்களில் பத்திரிகைகள் குறைக்கப்பட்டிருப்பது குறித்து அவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இரு நாளாந்த பத்திரிகைகளும் இரு வாராந்த பத்திரிகைகளுமே மாரநகரசபை நூலகங்களுக்கு கொண்டுவரப்படுவதாக தெரிவித்துள்ள வாசகர்கள் பத்திரிகை பயன்பாட்டை அதிகரிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நங்கூரம் திருட உதவிய கடற்படை சிப்பாய் கைது

## மாதகலில் சம்பவம்

(யாழ். செய்தியாளர்)

யாழ்.மாதகல் கடற்கரையில் மீனவர்களின் படகுகளிலிருந்த நங்கூரங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கடற்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாதகல் - லூர்து மாதா கோவிலுக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் தரித்து விடப்படும் மீனவர்களின் படகுகளில் இருந்த நங்கூரங்கள் களவாடப்பட்டு, பட்டா ரக வாகனத்தில் ஏற்றிச் செல்லப்படுவதை அப்பகுதி மக்கள் அவதானித்துள்ளனர்.

இது தொடர்பாக இளவாலை பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் நங்கூரம் ஏற்றிய வாகனம் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

இதன்போது கைதான சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கடற்படை சிப்பாய் ஒருவரே நங்கூரங்களை திருட உதவியதாக அவர்கள் வாக்குமூலம் அளித்திருந்தனர்.

அதனையடுத்து, முன்னெடுக்கப்பட்டு வந்த மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் கடற்படை சிப்பாய் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.






ஹட்டனில் டீசல் மற்றும் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்ள வாகன சாரதிகளும் பொதுமக்களும் நேற்று (28) நீண்ட நேரம் காத்திருந்தனர். (படப்பிடிப்பு: மனூர சுதத் செல்லஹேவா)

# பிம்ஸ்டெக் மாநாடு கொழும்பில் ஆரம்பம்

















பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாடு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (28) ஆரம்பமானது. (படப்பிடிப்பு: லலித் பெரேரா)

# அமைச்சர்களடங்கிய குழுக்களை நியமிப்பது பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அமைச்சர்களைக்கொண்ட குழுக்களை நியமிப்பதில் பயனில்லை. இந்த நிலைக்கு அவர்களது பொருளாதாரக் கொள்கைகளே காரணமாகும் - என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று (28) இடம்பெற்ற ஊடக சந்திப் பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் பொருளாதாரச் சிக்கல்கள் குறித்து நாடாளுமன்றில் எதிரணியினர் தெரிவித்த கருத்துகளையே பொருளாதார விதைந்துரைக் குழுக்களும் தெரிவித்துள்ளன. பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நியமிக்கப்படும் குழுக்களில் அமைச்சர்கள் நியமிக்கப்படுவதில் பயனில்லை. ஏனெனில் அவர்களது பொருளாதாரக் கொள்கைகளே இந்நிலைககுக் காரணமாகும்.



நாட்டில் தற்போது தோன்றியுள்ள பொருளாதார சிக்கல்களிலிருந்து மீட்சி பெற ஆலோசனை வழங்கும் குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டது. அதில் அமைச்சர்களான மஹிந்தானந்த அலுத்கமகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ போன்றவர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களது பொருளாதாரக் கொள்கைகளே இன்றைய நிலைக்குக் காரணமாக உள்ளபோது அவர்களது அறிக்கையால் எதுவும் நடக்கப்போவதில்லை.

அவர்கள் நியமித்த குழுக்கள் மேலும் ஒரு பொருளாதார தொழில்நுட்பக் குழுவை நியமிக்கும்படி தெரிவித்துள்ளது. இப்படி குழுக்கள் நியமித்து அவை மீண்டும் குழுக்களை நியமிக்க அறிவுரை வழங்குவதிலேயே காலம் செலவாகிறது. அது தவிர, பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை.

நாம் நாடாளுமன்றில் என்ன கூறினோம் எனப் பார்த்தால் கடன் தொடர்பான வியூகங்களை மாற்றியமைக்கும்படியும், சர்வதேச நாணய நிதியத்துடனும், சர்வதேச நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும்படியுமே கூறினோம். அவர்கள் நியமித்த குழுக்களும் அதனையே கூறியுள்ளன.

எனவே, இது விடயமாக குழுக்கள் தேவையில்லை. நாடாளுமன்ற ஹன்சாட் அறிக்கைகளை வாசித்தாலே ஒரு தெளிவு ஏற்படும். எல்லா அறிவுரைக் குழுக்களும் நாம் கூறுவதையே கூறுகின்றன. எனவே, புதிதாக இதற்கு உபதேச குழுவொன்று தேவையில்லை - என்றார்.

# தமிழ் முற்போக்கு கூட்டணி தேசிய அரசில் இணையாது

## இராதா எம்.பி. தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)



நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்தி தேசிய அரசொன்றை அமைப்பதற்கு அரசு முயற்சியெடுத்துவந்தாலும், அவ்வாறானதொரு அரசுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவை வழங்காது - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்றுமுன்தினம் (27) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"தேசிய அரசொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக தகவல் வெளியாகி யுள்ளது. எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

அவ்வாறு விடுக்கப்பட்டாலும் நாம் அதில் இணையமாட்டோம்.

தேசிய அரசு அமைப்பதால் பாரிய மாற்றம் ஏற்படப்போவதில்லை.

இதே ஜனாதிபதிதான் ஜனாதிபதி பதவியில் தொடர்வார். நாடாளுமன்றத்திலும் அவர்களின் அதிகாரமே காணப்படும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் புதியதொரு ஆட்சியமைப்பதே எமது இலக்கு. அந்த இலக்கை அடையவதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் மக்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அதற்காக அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைக்கு மக்கள் பக்கம் நின்று ஒத்துழைப்பு வழங்குவோம்.

உதவி ஆசிரியர் பிரச்சினை தொடர்பில் நிதி அமைச்சருடன் பேச்சு நடத்தியுள்ளேன். கடிதமும் கையளிக்கப்பட்டுள்ளது.

விரைவில் தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம்.

அதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சருடன் தமிழ் முற்போக்கு கூட்டணி சந்தித்து பேச்சு நடத்தும்.

இந்திய தூதுவரிடம் கையளிக்கப்பட்டுள்ள பாரதப் பிரதமருக்கான ஆவணம் மற்றும் மலையக மக்களுக்கான திட்டங்கள் பற்றி இதன்போது கலந்துரையாட எதிர்பார்க்கின்றோம் - என்றார்.









இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியால் விவசாயிகளும் பெரிதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, கிளிநொச்சியில் இயங்கும் புதிய வாழ்வு நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க கனநாதம் அருள்கட்டளை அமைப்பின் நிதி ஊக்குவிப்புத்தொகை வழங்கும்நிகழ்வு, அக்கரப்பத்தனை லோவர் கிராண்ட்லி இன் பாடசாலையில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்றது. இதில் அக்கரப்பத்தனையில் 20 விவசாய குடும்பங்களிற்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

(படங்கள் : அருண் யுகேஷ்)

# நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் கைது

தலவாக்கலை நிருபர்

மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின்பேரில் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலவாக்கலை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (27) கைது செய்யப்பட்டுள்ளார்.

மது போதையில் கொட்டகலையிலிருந்து நுவரெலியா நோக்கி தனது உத்தியோகபூர்வ வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் (27) மாலை வீதி போக்கு வரத்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தலவாக்கலை போக்குவரத்துப் பொலிஸாரால் பிரதான வீதியில் சென்ற வாகனங்கள் பரிசோதிக் கப்பட்டபோது குறித்த நபர் செலுத்திவந்த வாகனமும் பரிசோதிக்கப்பட்டது.

அவர் மது அருந்திவிட்டு வாகனத்தை செலுத்தியமை பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டமையையடுத்து அவர் தலவாக்கலை பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

பின்னர், பொலிஸ் பிணையில் விடுவிக்கப் பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரி வித்தனர்.

# சகவாழ்வு மற்றும் சமூக நல்லிணக்கம் தொடர்பில் சப்ரகமுவ மாகாண ஆசிரியர்களுக்கு செயலமர்வு





(எம்.எல்.எஸ்.முஹம்மத)

21ஆம் நூற்றாண்டுக்கான புதிய கல்வி சீர்திருத்ததை நோக்காகக்கொண்டு சகவாழ்வு மற்றும் சமூக நல்லிணக்கம் தொடர்பாக சப்ரகமுவ மாகாண அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை தெளிவூட்டும் மூன்று நாள் தொடர் செயலமர்வுகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கல்வி அமைச்சுடன் இணைந்து சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் வலய ரீதியாக தெரிவுசெய்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒழுங்குசெய்துள்ள மேற்படி மூன்று நாள் தொடர் செயலமர்வுகள் கடந்த ஞாயிறுமுதல் இன்றுவரை தெஹியோவிட்ட அட்டுலுகம கல்வி அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்று வருகின்றன.

சப்ரகமுவ மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பி.ஜெஸுப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றுவரும் இத்தொடர் செயலமர்வுகளில் "பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுவரும் நற்பிசை மற்றும் சகவாழ்வு தொடர்பான செயற்றிட்டங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டு வருவதுடன், அது தொடர்பாக ஆசிரியர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் செயன்முறை பயிற்சிகள் மற்றும் களப் பயணங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# அபூர்வ தாவரங்கள் - உயிரினங்களை கடத்த முயன்ற இரு ஜேர்மனியர்கள் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சிங்கராஜ வனத்திலிருந்து அபூர்வ இனங்களைச் சேர்ந்த உயிரினங்கள், பூச்சிகள், மூலிகை தாவரங்கள் மற்றும் இவற்றின் பாகங்களை தமது நாட்டுக்கு கடத்திச்செல்ல முற்பட்ட ஜேர்மன் நாட்டவர்கள் இருவரை வனவளத் திணைக்கள அதிகாரிகள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் கைதுசெய்யப்படும்போது இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட தாவரங்கள், உயிரினங்கள் மற்றும் இவற்றின் பாகங்களை அரச தாவரவியல் மற்றும் மரபணு நிபுணர் களின் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் இருவரும் 47 மற்றும் 52 வயதுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அன்று பிரபாகரனுக்கு கொடுக்க முடியாததை இன்று உலக நாடுகளுக்கு கொடுக்கிறது அரசு

## நாட்டின் வளங்கள் விற்கப்படுவது குறித்து முன்னாள் எம்.பி. டி.வி. சென்னன் கருத்து

(பதுளை நிருபர்)

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அன்று தீர்க்கதரிசனமாக இலங்கை அரசிடம் விடுத்த கோரிக்கைக்கு பெரும்பான்மையின தலைமைகள் ஏளனமாக இருந்தபோதிலும், இன்று நாட்டின் நாலா பகுதிகளிலும் நாட்டு வளங்கள் சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு குத்தகைக்கு விடும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக முன்னாள் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சென்னன் குறிப்பிட்டார்.

இ.தொ.கா. பதுளை பணிமனையில் நேற்று நடைபெற்ற தோட்டமட்டத் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் பதுளை மாவட்ட முன்னாள் எம்.பி. டி.வி.சென்னன் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்,

எமது தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அன்று நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்தச் சூழலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுக்கு நாட்டின் ஒரு பகுதியை ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு குத்தகைக்கு விட்டுப் பார்க்கலாமேயென்ற கோரிக்கையை இலங்கை அரசிடம் முன்வைத்திருந்தார்.

அக்கோரிக்கை பெரும்பான்மையினத் தலைவர்களின் ஏளனத்திற்கும், கடும் விமர் சனத்துக்கும் உள்ளாகியுள்ளது. ஆனால், அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அன்று முன்வைத்த கோரிக்கை இன்று தீர்க்கதரிசனமாக இருந்து வருகின்றதை இந்நாடே நன்கு அறிந்துள்ளது.

அன்று அவர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனுக்கு நாட்டின் ஒரு பகுதியை குத்தகைக்கு விடுமாறு விடுத்த கோரிக்கை, இன்று சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு, எமது நாட்டின் பல்வேறு பகுதிகள் குத்தகைக்கு விடும் செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

அத்துடன், நாட்டிலிருந்து புலம்பெயர்ந் திருக்கும் தமிழர்களை எமது நாட்டில் முதலீடு செய்து தொழிலகங்களை ஆரம்பிக்கும்படி, எமது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வேண்டு கோள்களை விடுத்துள்ளார். எமது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்சினை களுக்கு தீர்வு காணவேண்டுமானால், புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலீடு செய்வது, எமது நாட்டின் பல்வேறு பகுதிகள் குத்தகைக்கு விடுவது ஆகியவற்றை மேற்கொள்ளவேண்டியது அவசியமென்பதை, அரசு உணர்ந்துள்ளது. இந்நாடு எதிர்கொண்டுள்ள அழிவை மீட்டெடுக்க வேண்டுமானால், மேற்கண்ட செயற்பாடுகளை இந்நாட்டின் அரசு செய்தேயாக வேண்டுமென்ற நிலை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அன்று கூறிய தீர்க்கதரிசனமான விடயங்கள், இன்று நிதர்சனமாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

நுவரெலியா மாவட்டத்தில் எமது இராஜாங்க அமைச்சரை விட குறைந்த வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியிருக்கும் இருவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவ்வரசின் வெற்றிக்காக பாரிய பங்களிப்புகளை வழங்கிய இ.தொ.காவிற்கு இராஜாங்க அமைச்சு மட்டுமே கிடைத்துள்ளது. இதனை எம்மால் ஜீரணிக்க முடியாது.


அரசு எம்மை புறக்கணிப்பதாகவும், இரட்டைவேடம் போடுவதாகவும், கருத வேண்டியுள்ளது. மானிய விலையிலான கோதுமை மா பிரச்சினை, ஆயிரம் ரூபா தினச் சம்பள உயர்வுப் பிரச்சினை என்றெல்லாம் எமது மக்களின் பிரச்சினைகளை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

நாட்டின் தலைவர், தான் பெரும்பான்மை சிங்கள மக்களினால் தெரிவுசெய்யப்பட்டவரென்று, சிறுபான்மை சமூகங்கள் மனம் புண்படும்படியான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு வருகின்றார். தான் சிங்கள மக்களின் தலைவ ரென்பதை பலமுறை கூறிவிட்டார். கூறியும் வருகின்றார்.

பல்லின நாட்டின் தலைவரொருவர் ஒரு சமூகத்தை மட்டும் முன்னிலைப்படுத்திக் கூறி வருவது நல்லதல்ல. அது ஆரோக்கியமானதோர் சூழலையும் தோற்றுவிக்காது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி, எமது மக்களையே பெரிதும் பாதிக்க வைத்துள்ளது. இப்பாதிப்பிலிருந்து, எமது மக்களை மீட்டெடுக்கும் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை நாம் எடுத்தேயாக வேண்டும் - என்றார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com








உலக நாடக தினத்தை முன்னிட்டு நுவரெலியா அரங்கலையமும், பரிசுத்த திருத்துவக் கல்லூரியின் நாடக மன்றத்தினரும் இணைந்து நுவரெலியா பரிசுத்த கல்லூரியின் சௌமிய கலையரங்கம் மண்டபத்தில் நாடக தினம் கொண்டாடப்பட்டது. இதன்போது நாடகம் நடிப்பதில் ஆர்வமுள்ள இளைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள் : டி.சந்ரு, செ.திவாகரன்)

# சர்வதேச மத்தியஸ்தம் இல்லாமல் அரசுடன் பேசுவதென்பது தற்கொலைக்கு ஒப்பானது

## தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேசச் சொன்னால் அவர்களை மத்தியஸ்தம் வகிக்கச் சொல்லிக் கூறுங்கள். அதைவிடுத்து எந்தவித சர்வதேச மத்தியஸ்தமும் இல்லாமல் அரசாங்கத்துடன் பேசச் செல்வதென்பது தற்கொலைக்கு ஒப்பானது – என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துடனான தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு சுற்றுப் பேச்சுவார்த்தை முடிவிலும் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்கம் எதை ஒப்புக் கொண்டதென்பது தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பே தெரிவிக்கின்றது. ஆனால், அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பாக எதனையும் கூறவில்லை.

இலங்கையில் எதுவாக இருந்தாலும் சர்வதேச அழுத்தத்தின் மூலம் எமக்குக் கிடைக்கும். அதை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

இன்றைய நெருக்கடியிலிருந்து தப்பிப்பதற்காக அரசாங்கம் பேச்சு நடத்துமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடன்படக்கூடாது. பேச்சுவார்த்தை என காலத்தை ஓட்டிக்கொண்டு செல்லாமல் நிகழ்ச்சிநிரலை தயாரித்து செயற்பட வேண்டும். இல்லையேல் ஈழத் தமிழினம் தொடர்ந்தும் ஏமாற்றப்படும் என்ற கதையாகத்தான் இருக்கும்.

தண்டனை விதிக்கப்பட்டு மேன்முறையீடு செய்யாதுள்ளவர்களுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க முடியும். இதிலுள்ள பிரச்சினை என்றால் சிலர் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தவர்கள் மாத்திரம் அந்த மேன்முறையீடுகளை மீளப்பெற்றால் மாத்திரம் அவர்களுக்கான பொது மன்னிப்பை ஜனாதிபதியால் வழங்க முடியும். ஆகவே இதைச் செய்வதற்கு ஒரு வாரம் இரண்டு வாரங்களுக்கு மேல் எடுக்கப்போகின்றீர்கள் என்றால் வருத்தத்திற்குரியது.

காணி சுவீகரிப்பு தொடர்பாக ஜனாதிபதிக்கும் இராணுவத் தளபதிக்கும் புலனாய்வு அறிக்கை செல்லவில்லையென்றால் அதனை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட காணி சுவீகரிப்பு வர்த்தமானி அறிவித்தல்களை இரத்துசெய்ய கூட்டமைப்பு வலியுறுத்த வேண்டும் – என்றார்.

# யாழ். போதனாவில் குருதித் தட்டுப்பாடு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லாவகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியாத ஆபத்தான நிலையில் இரத்தவங்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்த வங்கியில் சராசரியாக இருக்க வேண்டிய குருதியின் அளவு 330 பைந்தாகும். ஆனால், தற்போது இரத்த வங்கியில் 167 பைந்த் குருதி மட்டுமே இருக்கின்றது. இது இன்னும் நான்கு நாட்களில் முடிந்துவிடும். சராசரியாக நாளொன்றிற்கு 35 - 40 பைந்த் குருதி, நோயாளர்களுக்கு இரத்த வங்கியிலிருந்து விநியோகிக்கப்படுகின்றது.

திட்டமிட்டபடி நடக்கவிருந்த இரத்ததான முகாம்கள் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதனால் எதிர்பார்க்காத வகையில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நடைபெற்ற இரத்ததான முகாம்களிலும் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு காரணமாக குறைந்தளவு குருதிக்கொடையாளர்கள் மட்டுமே இரத்த தானம் செய்கின்றார்கள். ஆகவே, இரத்த வங்கியில் அல்லது இரத்ததான முகாம்களில் ஏற்கனவே இரத்த தானம் செய்து நான்கு மாதங்கள் பூர்த்தியானவர்களும் புதிதாக இரத்த தானம் செய்யக்கூடியவர்களும் இந்த ஆபத்தான நிலையை தவிர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இரத்த வங்கி அழைப்பு விடுத்துள்ளது.

இரத்த தானம் செய்வதற்கான அடிப்படை தகுதிகளாக, 18 -55 வயது வரை ஏற்கனவே இரத்த தானம் செய்திருந்தால் அவர்கள் 60 வயது வரை இரத்த தானம் செய்யலாம்,

குறைந்தது 50 கிலோ நிறையை கொண்டிருத்தல், ஈமோகுளோபினின் அளவு 12.5 கிராமாக இருத்தல், ஏற்கனவே இரத்த தானம் செய்திருந்தால் 4 மாதங்கள் பூர்த்தியாக வேண்டும், கொரோனா தடுப்பூசி ஏற்றியிருந்தால் 7 நாட்களின் பின்னர் இரத்த தானம் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் அரச இலச்சினையை தவறாக பயன்படுத்தும் அரசியல்வாதி

## துரித நடவடிக்கைகளை நீதி அமைச்சு மேற்கொள்ளவேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை



(மன்னார் நிருபர்)

மன்னாரில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர் ஒருவர் அரச இலச்சினையை தவறாக பயன்படுத்தி தனது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நானாட்டான் பிரதேச சபையின் போனஸ் ஆசன உறுப்பினர் றொஜன் என்பவரே குறித்த செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாக தெரியவருகின்றது.

குறித்த பிரதேச சபை உறுப்பினர் அரசியல் பிரதிநிதியாக இருந்த நிலையில் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், குறித்த நபர் பிரதேச சபை உறுப்பினராக இருந்து மணல் ஏற்றும் நடவடிக்கை உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட நிலையில், அவர் திடீர் மரண விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்க மன்னார் நீதிமன்றத்தினால் எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்படாத நிலையில், திடீர் மரண விசாரணை நடவடிக்கைகளை மாவட்டத்திலுள்ள ஏனைய திடீர் மரண விசாரணை அதிகாரிகள் முன்னெடுத்து வந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த பிரதேச சபை உறுப்பினர் தனது வாகனத்திற்கு பெயர்ப்பலகையை திடீர் மரண விசாரணை அதிகாரி என சிங்களத்தில் தயாரித்து அதில் அரச இலச்சினையையும் தவறாகப் பயன்படுத்தி குறித்த பெயர்ப்பலகையை பயன்படுத்தி வருகிறார்.

இந்த அரச இலச்சினை பயன்படுத்தப்பட்ட பெயர்ப்பலகை குறித்த பிரதேச சபை உறுப்பினிடம் உள்ள ஏனைய வாகனங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு ஏனையவர்கள் பயன்படுத்தி வருகின்றதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும் குறித்த பெயர்ப்பலகையினை பயன்படுத்தி இராணுவ சோதனைச்சாவடி ஊடாக எவ்வித இடையூறுகளுமின்றி பயணிப்பதாக தெரியவருகின்றது.

அரசியல்வாதியான ஒருவரை எவ்வாறு திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்க முடியும் என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளதோடு, அரச இலச்சினையை தவறாகப் பயன்படுத்தும் மற்றும் அரசியல் பிரதிநிதியாக உள்ள குறித்த பிரதேச சபை உறுப்பினரின் திடீர் மரண விசாரணை அதிகாரி நியமனம் குறித்து நீதி அமைச்சர் மற்றும் நீதி அமைச்சு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சாரதாம்பாள் நினைவாக தென்னை மரக்கன்றுகள் வழங்கிவைப்பு





(சாவகச்சேரி நிருபர்)

யாழ்ப்பாணம், புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் கருணாகரன் சாரதாம்பாளின் 31ஆம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு சூழகம் அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் பயனாளிகளுக்கு தென்னை மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

அமரர் சாரதாம்பாள் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் சூழகம் அமைப்பால் புங்குடுதீவில் முன்னெடுக்கப்பட்ட தென்னை மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறை, சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# சுதுமலை இளைஞன் மீது வாள்வெட்டு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மானிப்பாய், சுதுமலை தெற்கைச் சேர்ந்த சிவானந்தன் சஜிதரன் என்பவர் மீதே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த நபரின் வீட்டினுள் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் கொண்ட குழு அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

# யாழில் பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு புகுந்து தாக்குதல் - நால்வர் காயம்!

(யாழ். நிருபர்)




யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு புகுந்து வன்முறை கும்பல் தாக்குதல் நடத்தியதில் பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்பத்தினர் நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரின் கோண்டாவில் வீட்டினுள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 10 பேர் கொண்ட வன்முறைக் கும்பலொன்று புகுந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டிற்கு அருகில் இடம்பெற்ற மரணச்சடங்கில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக இரண்டு குழுக்களுக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது மோதலாக மாறியுள்ளது.

அதன் பின்னணியில் பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டினுள் புகுந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், வீட்டிலிருந்த பொருட்களையும் அடித்து உடைத்து சேதமாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி நான்கு பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மீசாலையில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இளைஞரொருவர் கைது

(யாழ். நிருபர்)

யாழ். மீசாலை - அல்லாரை பகுதியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இளைஞரொருவர் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அல்லாரைப் பகுதியில் இளைஞரொருவர் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் இரகசியத் தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞரிடம் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கைதடி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். கைதடி மேற்கைச் சேர்ந்த சீ.ரவீந்திரன் (வயது 55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கைதடி - கோப்பாய் வீதியில் கைதடி கலைவாணி வித்தியாலயத்திற்கு அருகில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற குறித்த குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# வாள்வெட்டுக் கும்பலின் தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் வாள்வெட்டுக் கும்பல் ஒன்றின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

உடுவில் தெற்கைச் சேர்ந்த நாகராசா மணிமாறன் (வயது 51) என்பவரே காயமடைந்துள்ளார்.

குறித்த நபரின் வீட்டினுள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அத்துமீறி நுழைந்த வாள்வெட்டுக் கும்பல் ஒன்று வீட்டின் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன், அதனைத் தடுக்க முற்பட்ட வீட்டு உரிமையாளர் மீது வாளினால் வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், மானிப்பாய் பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இளைஞரொருவர் கடத்தப்பட்டுள்ளதாக உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு

(யாழ். நிருபர்)

புத்தூர் மேற்கு, நவக்கிரியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் மேற்கு, நவக்கிரியைச் சேர்ந்த அருந்தவராசா சயந்தன் என்ற 30 வயது இளைஞரே நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார் என்று அவரது உறவினர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

வீட்டு வளாகத்திலிருந்து எவரோ பாய்ந்து வெளியே செல்வதை அவதானித்த இளைஞர், வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தார் என்றும், வெளியே சென்ற இளைஞரை வீட்டின் முன்புறம் உள்ள தோட்ட வெளியில் நின்றிருந்த மூவர் துரத்திச் சென்றனர் என்றும் கூறப்படுகின்றது.

அதன்பின்னர் இளைஞர் வீடு திரும்பவில்லை. உறவினர்கள் தேடியபோது அவரது கைபேசி வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கடந்த 12ஆம் திகதி இளைஞரின் வீட்டுக்கு வந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதில் வெட்டுக்காயத்துக்குள்ளான இளைஞரின் தந்தை தற்போதும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

அந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட இருவர் நேற்று முன்தினம் பிணையில் வெளியே வந்துள்ளனர் என்று இளைஞரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகத்தின் அடிப்படையில் சிலரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னரே மேலதிக தகவல்களைத் தெரிவிக்க முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

திகதி 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4719
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,595,540.00
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 4 8 5 3 1 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 16,238,540.00

Mega POWER 23+ மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1067
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,463,040.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 244,283,678.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: J
சுப்பர் இலக்கம்: 22
வெற்றி இலக்கங்கள்: 05 41 49 75

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 749
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,085,780.00
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 03 30 34 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 104,747,782.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1229
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,098,400.00
வெற்றி இலக்கினம்: மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 3 8 6 3 6 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,763,423.60

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# பிரபாகரன் யார் என்பதை தென்பகுதி சிங்கள மக்களுக்கு பொருளாதார நெருக்கடி உணர்த்தியுள்ளது!

## அரியநேத்திரன் எடுத்துரைப்பு

(வீரமுனை நிருபர்)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விலையேற்றம், உணவுப்பஞ்சம், எரிபொருள் தட்டுப்பாடு, வரிசையில் நிற்கும் அவலங்கள் எல்லாம் தென்பகுதி சிங்கள மக்களுக்கும் நாடாளுமன்றத்திலுள்ள சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆயுதம் ஏந்தி போராடிய விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர் பிரபாகரனையும் ஞாபகப்படுத்தி புகழ்ந்து பேசவும் உணரவும் வைத்துள்ளது - என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பாக மேலும் கருத்து கூறுகையில்,

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திற்கு பின்னர் ஆட்சிசெய்த பல அரசாங்கங்களின் காலத்தில் மக்கள் எதிர்கொள்ளாத மிகப்பெரும் பொருளாதார நெருக்கடி அவலங்களை தற்போதய கோட்டாபய அரசில் மக்கள் சந்தித்துள்ளனர்.

1970ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டார நாயக்கா ஆட்சிக்காலத்தில் பாண், கோதுமை மா போன்ற பொருட்களுக்கு தட்டுப்பாடும் வரிசையில் நின்று பாண் வாங்கிய நிலைகளும் இருந்தன. ஆனால், இப்போதுள்ள நிலைபோன்று எரிபொருள் தட்டுப்பாடு, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு, பொருட்களுடைய நாளாந்த விலையேற்றம் என்பன ஏற்படவில்லை.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்று ஒரு வருடத்தின் பின்னர் மிகவும் மோசமான நிலைக்கு நாடு சென்றுகொண்டிருப்பதும் டொலர்கள் இன்று வெளிநாட்டுப் பொருட்களை வாங்க முடியாமல் திண்டாடுவதும், நாடு நாடாக நிதி அமைச்சர் உட்பட ஆட்சியாளர்கள் கடன் வாங்குவதற்காக அலைந்து திண்டாடுவதையும் காணமுடிகிறது.

வடக்கு, கிழக்கு தமிழ்மக்கள் 73 வருடங்களாக ஓர் அரசியல் தீர்வுக்காக முப்பது வருட அகிம்சைப் போராட்டங்களையும், முப்பது வருட ஆயுதப் போராட்டங்களையும் எதிர்கொண்ட காலங்களில் எல்லாம் பாரிய பொருளாதார நெருக்கடி இன்னல்களையும், உணவுப்பஞ்சத்தையும், இனப்படுகொலைகளையும், உடைமைகளையும் பறிகொடுத்து அழிவுகளை நேரடியாக இலங்கை அரசுகளின் தாக்கங்களை உணர்ந்தவர்கள் என்பதை மறுக்க முடியாது.

தென்பகுதி சிங்கள மக்கள் ஆயுதப் போராட்டத்தை அடக்கிய தலைவர்களாக ராஜபக்ஷ குடும்பத்தை கடவுளாக பார்த்தனர். 2009, மே 18இல் போர் மௌனித்தபோது பால்சோறும் கட்டச்சம்பலும் வழங்கி ஆனந்தக் கூத்தாடி மகிழ்ந்தார்கள். இதன் வெளிப்பாடக கடந்த 2019, ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கு அதிக வாக்குகளை அளித்து ஜனாதிபதியாகவும் 2020, பொதுத் தேர்தலில் மொட்டு கட்சியை அமோகமாக வெற்றிபெற வைத்து குடும்ப ஆட்சியையும் வர வைத்தனர்.


மொட்டுக்கு வாக்களித்த தென்பகுதி சிங்கள் மக்களே இன்று ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் கருத்துகளையும் பகிரங்கமாகவே ஆண்களும் பெண்களும் கூறுகின்றனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் காலத்தில் தமக்கு இவ்வாறான நிலைமைகள் இல்லையெனவும், அவர்கள் இருந்திருந்தால் இப்படியான கஷ்டம் ஏற்பட்டிருக்காது எனவும் சிங்கள மக்களே ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் அச்சமின்றி கருத்துகளை கூறுகின்றனர். இதைவிட சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் விடுதலைப் புலிகள் தொடர்பான நல்ல கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்ட விவாதத்தில் உரையாற்றிய ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், 1987 செப்டம்பர் 26ஆம் திகதிமுதல் 10 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் இருந்து உயிர்நீத்த தியாகி திலீபன் தமிழ் மக்களை இன்று பயங்கரவாதத் தடைச்சட்டம் வதைக்கிறது, ஒருகாலம் சிங்கள மக்களும் இதனால் பாதிப்படைவார்கள் என்று கூறியது உண்மை என கூறினார்.

இவ்வாறான நிலைகளை பார்க்கும்போது இன்றைய பொருளாதார நெருக்கடி விடுதலைப் புலிகளை பற்றிய உண்மை, புரிதல் தென்பகுதி சிங்கள மக்களுக்கு நினைவுகூர வைத்துள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தலைவர் தொடர்பாக கருத்துகளை அச்சம் காரணமாக பகிரங்கமாக கூறமுடியாமல் உள்ள நிலையில் சிங்கள மக்கள் துணிந்து உண்மைகளை வெளிப்படுத்துவதை இன்று அநேகமாக காணமுடிகிறது. இதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் மேலும் கூறினார்

## போடியார் புலம்பல்!



**வெகுவிரைவில் தமிழர்களின் அடையாளம் இல்லாமல் போகுமாம் எண்டு யாழ் எம்.பி. நீதியரசர் விக்கினேஷ்வரன் ஐயா சொல்லியிருக்காரு எலுவா..! அச்சொட்டா அது மெய்தான் ஐயா.. ஆனா இத கதைக்க நீங்க லாயக்கு இல்ல. நீங்களே இரண்டு புள்ளயலுக்கும் தமிழிச்சிகளை கலியாணம் முடிச்சுக்கொடுக்க வக்கில்லாம சிங்களத்திகளுக்கு கலியாணம் கட்டிவைச்சால் தமிழர்களிற அடையாளம் இல்லாமல் போகாமல் வேறு என்ன செய்யும்..?**

**உன்னை திருத்து ஒலகம் திருந்தும் எண்ட பாடத்த படிச்சுப்போட்டு இத கதயுங்க ஐயா..!**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தந்தை செல்வாவின் 124ஆவது ஜனன தின நிகழ்வு வியாழனன்று மட்டக்களப்பில்

(வீரமுனை நிருபர் )

இலங்கைத் தமிழரசுக் கட்சி நிறுவுனர் தந்தை செல்வா என அழைக்கப்படும் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 124ஆவது ஜனன தினம் மட்டக்களப்பு அரச பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள அன்னாரின் சிலை ஸ்தாபிப்பு இடத்தில் நாளை மறுதினம் 31ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

முற்பகல் 8.30 மணியளவில் அன்னாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அக வணக்கமும் இடம்பெறவுள்ளது.

தந்தை செல்வா என தமிழர்களால் போற்றப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் 1898 பங்குனி 31ஆம் திகதி பிறந்தார்.

இலங்கைத் தமிழ் அரசியல்வாதியாக, சட்டத்தரணியாக மற்றும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கைத் தமிழரின் அரசியல் தலைவராகத் திகழ்ந்த இவர், 1977 ஏப்ரல் 26இல் உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி – ஹெரோயினுடன் சந்தேகநபரொருவர் கைது

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை, சீனக்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சமன்புர பிரதேசத்தில் கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவரை கைதுசெய்துள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்

சீனக்குடா இரகசியப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கயை கடந்த சனிக்கிழமை குறித்த வீட்டை சோதனையிட்ட போது அனுமதிப்பத்திரமின்றி வைத்திருந்த கட்டுதுவக்கு ஒன்றும் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வீட்டிலிருந்து 33 வயதுடைய பெண்ணொருவரை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளதாகவும் குறித்த பெண் வழங்கிய வாக்குமூலத்திற்கமைய கைப்பற்றப்பட்ட கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் அவரது தந்தையுடையது எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

தனது தந்தை வீட்டில் இருக்கவில்லை எனவும் வேலை நிமிர்த்தம் கொழும்புக்குச் சென்று இருந்ததாகவும் குறித்த பெ=ண் வாக்குமூலம் அளித்துள்ளார். இவ்வாறிருக்கையில், குறித்த பெண்ணின் தந்தையை சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர். மேலும் தம்வசம் அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கி வைத்திருந்தமை மற்றும் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் சந்தேகநபரை கைதுசெய்துள்ளதாகவும் குறித்த பெண்ணை நாளைய தினம் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிசார் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது

# கோட்டைக்கல்லாறு பொது நூலக வாசகர் வட்டத்தினால் இலவச மருத்துவ முகாம்



(பாண்டிருப்பு நிருபர)

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபைக்குட்பட்ட கோட்டைக்கல்லாறு பொது நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இலவச வைத்திய முகாம் பொது நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் ஏ.புருஸோத்மன் தலைமையில் கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்வைத்திய முகாமில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பாரிசவாத சிகிச்சைப்பிரிவு விசேட நிபுணர் மருத்துவர் என்.இதயகுமார், அவசர மற்றும் விபத்து சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் பி.சுரேஸ்குமார், பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் கே.சோதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இங்கு பொதுமக்களுக்கான இலவச வைத்திய ஆலோசனை மற்றும் நீரழிவு நோயைக் கண்டறிவதற்கான இரத்தப் பரிசோதனை, உயர் குருதி அமுக்கம் கண்டறிதல் பரிசோதனை, பாரிசவாதம் தொடர்பான விழிப்புணர்வு, இளைஞர், யுவதிகளுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு, நோய்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கான கிளினிக் வசதிகள் ஆகியவை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியன நடைபெற்றன.

கோட்டைக்கல்லாறு பொது நூலக வாசகர் வட்டமானது வருடாந்தம் பல்வேறு சமூக செயற்திட்டங்களை ஒழுங்குபடுத்தி ஏற்படுத்திவருகின்றது. நூலக பொறுப்பாளரும் வாசகர் வட்டத்தின் செயலாளருமான எஸ்.வினோதா, பொருளாளர், கே.கபிலோஸன் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இவ்விலவச வைத்திய முகாமில் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த இளைஞனுக்கு கௌரவிப்பு



(நூருல் ஹ_தா உமர்)

சாய்ந்தமருது ஜும்மா பெரியபள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை ஏற்பாட்டில் புலன் உறுப்புகளால் அசாத்தியங்கள் நிகழ்த்தி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்திருக்கும் சாய்ந்தமருதூர் சாதனை இளைஞன் எம்.எஸ்.எம் பர்ஸான், பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் மற்றும் நம்பிக்கையாளர் சபையினர்களால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இதில் சாய்ந்தமருது ஜும்மா பெரியபள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை பொருளாளர் ஏ.ஏ.சலீம், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், துணிந்தெழு இதழாசிரியர் ஜே.எம்.பாஸீத், தனியார் வானொலி அறிவிப்பாளர் எம்.என்.எம்.சௌக்கி உட்பட பலரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வு சாய்ந்தமருது ஜும்மா பெரியபள்ளிவாசல் நிர்வாக அலுவலகத்தில் இடம்பெற்றது.

# கற்றல் - தலைமைத்துவத்தில் பெண்கள் முழுநாள் வட்டமேசை மாநாடு அம்பாறையில்





(வி.சுகிர்தகுமார்)

அம்பாறை மாவட்ட பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் ஏற்பாட்டில் கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள் எனும் செயல்திட்டத்தின் கீழ் ( Search for common ground) சேர்ச் போ கொமன் கிறவுண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற 5ஆவது வில் கிளப் (Will club) முழுநாள் வட்டமேசை மாநாடு அம்பாறையில் நேற்று இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பாதிப்புற்ற பெண்கள் நிறுவனத்தின் இணைப்பாளர் சைமன் வாணி தலைமையில் இடம்பெற்ற அமர்வுகளில் (Search for common ground) சேர்ச் போ கொமன் கிறவுண்ட் நிறுவனத்தின் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கான பொது ஆலோசகர் நளினி ரட்ணராஜா கலந்துகொண்டு நெறிப்படுத்தினார்.

மூன்று கட்டங்களாக இடம்பெற்ற நிகழ்வுகளில் முதற்கட்ட அமர்வில் உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற தவிசாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

இரண்டாவது அமர்வில் சேர்ச் போ கொமன் கிறவுண்ட் நிறுவனத்தின் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கான பொது ஆலோசகர் நளினி ரட்ணராஜா கலந்து கொண்டு பெண்களும் அரசியலும் எனும் தொனிப்பொருளில் கருத்துரைத்தார்.

இதன்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் அப்துல் அசீஸ் வளவாளராக கலந்துகொண்டு பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் உள்ளிட்ட பல்வேறு நீதிச்சட்டங்கள் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

மூன்றாவது அமர்வில் உள்ளூராட்சி சபை பெண் உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்ட செயற்றிட்ட அறிக்கை தொடர்பாகவும் எதிர்கால திட்டங்கள் தொடர்பான விளக்கமும் ஊடகவியலாளர்கள் மத்தியில் எடுத்துரைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது ஊடகவியலாளர்களும் உள்ளூராட்சி பெண்களுக்கும் இடையிலான நெருங்கிய வலையமைப்பினை கட்டியெழுப்பும் தளமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது நகரசபை தொடர்பான கோரிக்கை கால ஓட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும்

## தேசிய காங்கிரஸின் தலைவர் அதாஉல்லாஹ் அக்கரைபற்றில் தெரிவிப்பு




(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது நகரசபை தொடர்பான கோரிக்கையும் கால ஓட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படும். மேலும் சில முஸ்லிம் பிரமுகர் களினால் உருவாக்கப்படுவதாக தெரிவிக்கப்படும் முஸ்லிம் கூட்டமைப்பு என்பது தீர்த்தக்கரை வியாபாரம் என்பதற்கு ஒப்பானது - என தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பகுதியில் நேற்று முன்தினம் (27) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆலோசனை சொல்லும் அளவிற்கு நாட்டின் பொருளாதார நிலைமை மாறிவிட்டது. ஏனெனில், ரணிலின் ஆட்சியில் தானே எமக்கு இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டன.

எனவே, இனவாதத்தை வைத்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. உணவுப் பஞ்சத்திலிருந்து எமது நாட்டை அவசரமாக எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பதை மக்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும். தற்போது அரசாங்கத்துடன் 11 கட்சிகளுடன் நாமும் ஒன்றாகவே இருக்கின்றோம்.

எமது கட்சி ஒரு தனி கட்சி. எங்களது கட்சியின் முக்கிய நோக்கம் நாட்டுப்பற்றாகும். இந்த நோக்கம்தான் அரசாங்கத்துடன் எமது கட்சியை ஒத்துப்போக வைக்கின்றது. எனவேதான் எமது நாட்டிற்கு வெளிநாட்டு சக்திகளினால் தீங்கு ஏற்படக் கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்கின்றோம். உலகம் இன்று 3ஆவது போருக்குத் தயாராகி வருகின்றது. எனவேதான் சண்டியர்களுக்கு ஆக்கிரமிக்கின்ற மற்றும் தேவைப்படும் இடமாக இலங்கை இருக்கின்றது என்பதை நாம் அறிவோம். கடந்த காலங்களில் எம்சிசி ஒப்பந்தம் மேற்கொண்ட ரணில் விக்ரமசிங்க தற்போது ஆலோசனை கூற வருகின்றார்.

சில நாடுகள் தங்கள் எதிரிகளை தாக்குவதற்கு இலங்கையை ஒரு தளமாக பயன்படுத்த பார்ப்பார்கள். இதனால் எமது வீட்டினுள்தான் யுத்தம் ஆரம்பமாகும். நாங்கள் பொருளாதார நிலையில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளோம் என்ற அவலநிலையை பயன்படுத்தி எமது நாட்டின் வளத்தை சூறையாடுகின்ற எந்த சக்தியாக இருந்தாலும் தேசிய காங்கிரஸ் கட்சி சகல கட்சிகளுடன் இணைந்து பாடுபடும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அதேபோன்று சாய்ந்தமருது நகரசபை தொடர்பான கோரிக்கையும் கால ஓட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும். மேலும் சில முஸ்லிம் பிரமுகர்களினால் உருவாக்கப்படுவதாக தெரிவிக்கப்படும் முஸ்லிம் கூட்டமைப்பு என்பது தீர்த்தக்கரை வியாபாரம் என்பதற்கு ஒப்பானது. எந்த கூட்டமைப்பும் மக்களுக்கு பிரயோசனமில்லை என்பதே எமது கருத்தாகும் என்றார்.

# கல்முனையில் போஷாக்கு - நலவாழ்வு தொடர்பில் விளக்க விசேட கருத்தரங்கு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஏற்பாட்டில் மதத்தலைவர்கள் மற்றும் திருமணப் பதிவாளர்களுக்கான போஷாக்கு மற்றும் நலவாழ்வு தொடர்பிலான கருத்தரங்கொன்று நேற்று முன்தினம் (27) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் மதத்தலைவர்கள், திருமணப் பதிவாளர்கள், மருத்துவ மாதுக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், இங்கு வளவாளராகக் கலந்துகொண்டு பேசிய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் திருமணப் பந்தங்கள் தொடர்பிலும் உணவு பழக்கவழக்கங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

நாட்டில் இப்போது வேகமாக வளர்ந்துவரும் ஆரோக்கியமற்ற வேகமான உணவுகள் தொடர்பில் கருத்துரைத்த டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் அந்த உணவுகளினால் ஏற்படும் பக்கவிளைவுகள் பற்றி ஆழமாக தெளிவுபடுத்தியதுடன், குழந்தைகள் வளர்ப்பு, முறையற்ற உணவுப் பாவனைகளினால் இளவயது கர்ப்பிணிகள் சமகாலத்தில் அனுபவிக்கும் நோய் நிலைகள் அதற்கான தீர்வுகள் பற்றி விளக்கினார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வைத்தியர்கள் பலரும் கலந்துகொண்டு போஷாக்கு மற்றும் நலவாழ்வு தொடர்பில் விளக்கம் கொடுத்தனர்.

# மட்டக்களப்பில் வெற்று எரிவாயு சிலிண்டர் 18 ஆயிரம் ரூபா

## கடும் நெருக்கடிக்கு உள்ளாவதாக பொதுமக்கள் விசனம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிவாயு தட்டுப்பாட்டையடுத்து ஒரு சில வர்த்தகர்கள் லிட்ரோ எரிவாயு வெற்றுச்சிலிண்டரை 18 ஆயிரம் ரூபாவுக்கும், சில வர்த்தகர்கள் எரிவாயுக்களை பதுக்கிவைத்து 5 ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்வதாகவும் இதனால் தாம் பெரும் நெருக்கடிக்குள்ளாகுவதாகவும் பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் எரிவாயு தட்டுப்பாட்டையடுத்து மட்டக்களப்பு பிரதான எரிவாயு முகவர்களுக்கு ஊடாக எரிவாயுவை வழங்காது நேரடியாக பொதுமக்களுக்கு விநியோகித்து வருகின்றனர்.

இந்நிலையில் 3 வர்த்தக வலய பிரிவுகளாக பிரிக்கப்பட்ட பிரதேசங்களில் எரிவாயுக்காக காத்திருக்கும் பொதுமக்களுக்கு பிரதான எரிவாயு முகவர்கள் டோக்கன் வழங்கி அந்த வழங்கப்பட்ட டோக்கனுக்கு ஏற்ற எரிவாயுக்களை விநியோகித்து வருகின்றனர்.

பொதுமக்கள் எரிவாயுவை பெறுவதற்கு நீண்ட வரிசையில் காத்துநிற்கின்றபோது இந்தச் சந்தர்ப்பத்தில் சில எரிவாயு முகவர்களுக்கு ஹோட்டல்களின் உரிமையாளர்கள் தம்மிடம் இருக்கும் வெற்றுச் சிலிண்டர்களை தமது வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் வெளியிலுள்ள ஒருவருக்கு ஆயிரம் ரூபாவை வழங்குகிறார்கள். அதன் பின்னர் அவர்களிடம் வெற்றுச் சிலிண்டரை கொடுத்து அதிகாலை 4 மணிக்கு எரிவாயு பெற்றுக்கொள்ள பொதுமக்கள் இருக்கும் வரிசையில் இவர்களும் சென்று முகவர்களால் விநியோகிக்கப்படும் எரிவாயுவை 2800 ரூபாவுக்கு கொள்வனவு செய்கிறார்கள். அங்கிருந்து சுமார் 10 எரிவாயுக்களை சேர்த்து தமது வர்த்தக நிலையங்களுக்கு கொண்டுசென்று பதுக்கிவைத்துக்கொண்டு அதனை 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்வதாக பொதுமக்கள் கடும் குற்றச்சாட்டு தெரிவித்து விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் எரிவாயுவுக்காக வரிசையில் காத்திருக்கும் பொதுமக்கள் எரிவாயு பெற்றுக் கொள்ள முடியாமல் ஏமாந்து திரும்பிச் செல்கின்றனர். எனவே, இவ்வாறான பதுக்கல் வர்த்தக மாபியாக்களை இனங்கண்டு பொலிஸாரும் நடவடிக்கை கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

இதேவேளை, லிட்ரோ எரிவாயு வெற்றுச் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக 16 ஆயிரம் தொடக்கம் 18 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

# கோறளைப்பற்று நாசிவன்தீவில் சமூக பங்கேற்புடன் திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டம் முன்னெடுப்பு!



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச சபையின் நிர்வாகத்துக்குட்பட்ட நாசிவன்தீவில் வளர்பிறை சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வாழைச்சேனை வேல்ட்விஷன் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடனும், கோறளைப்பற்று பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ் பெண்களுக்கான விழிப்புணர்வும், திண்மக் கழிவுகளை தரம் பிரித்துச் சேகரிப்பதற்கான நிகழ்வும் கோறளைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வளவாளர்களாக கோறளைப்பற்று பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அப்துல்லாஹ மற்றும் ஹாரூன் கலந்துகொண்டு இத்திட்டத்தின் நோக்கம் தொடர்பாக விரிவாக விளக்கமளித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



சாய்ந்தமருது கிட்ஸ் வொய்ஸ் முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த பட்டமளிப்பு நிகழ்வும், லீ மெட்ரீடியன் வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் ( 27) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் மாணவச் சிறுமி ஒருவருக்கு மாலை அணிவித்து கௌரவிப்பதைக் காணலாம். (படம் - மாவடிப்பள்ளி நிருபர்)

# உதவி அதிபராக கடமையாற்றிய சுஹைப் 34 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு

(அட்டாளைச்சேனை நிருபர்)

உதவி அதிபராக கடமையாற்றிய சுஹைப் தனது 34 வருட ஆசிரிய சேவையிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்றார்.

சுஹைப் அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று என்னும் அழகிய நகரில் 1961 டிசம்பர் மாதம் 04ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியினை அக்கரைப்பற்று அல்-முனவ்வறா வித்தியாலயம் மற்றும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி ஆகியவற்றில் பெற்றுக்கொண்டார்.

இலங்கை ஆசிரியர் சேவையின் முதல் தர ஆசிரியரான இவர், பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராவார். 1987ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி களுத்துறை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயத்தில் முதல் நியமனம் பெற்று கணித, விஞ்ஞான ஆசிரியராக இணைந்து கொண்டார். அதன்பின்னர் 1989ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிவரை இப்பாடசாலையில் சேவையாற்றினார். அதனைத் தொடர்ந்து 1990ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் 1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினைப் பெற்றுக்கொண்டார்.

1992ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் 1994ஆம் ஆண்டு மே மாதம் 08ஆம் திகதிவரை பேருவளை அல்-ஹுமைசறா மத்திய கல்லூரியில் சேவையாற்றிய இவர், 1994ஆம் ஆண்டு மே மாதம் இடமாற்றம் பெற்று அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் இணைந்துகொண்டு ஓய்வு பெறும்வரை நீண்டகால சேவையினை ஆற்றியிருந்தார்.



இவர் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் ஆரம்ப கல்விக் காலம்முதல் பாடசாலைக் கல்வி நிறைவடையும்வரை பல்வேறான திறமைகளை காட்ட ஆரம்பித்தார். பாடசாலைக் கல்விக்காலப் பகுதியில் கல்விச் செயற்பாடுகளில் அதீத திறமை காட்டி முன்னணி மாணவராகத் திகழ்ந்தார். கல்விச் செயற்பாடுகளுக்கு மேலாக இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கால்பதித்து பாடசாலைக்கு பல்வேறான பெருமையினையும் இவர் சேர்த்திருந்தார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் கடந்த 1994ஆம் ஆண்டு சேவைக்காக இணைந்துகொண்ட இவர், தனது ஓய்வுக் காலம்வரை சுமார் 27 வருடங்களும் ஆறு மாதங்களையும்கொண்ட சேவையினை செவ்வனே செய்து முடித்தார். பாடசாலையின் நிர்வாக கட்டமைப்பிற்குள் இணைந்து பல்வேறு சேவைகளை மாணவர்களுக்காக அயராது செய்துள்ளார்.

விஞ்ஞானப் பாட இணைப்பாளராகவும், விஞ்ஞான ஆய்வுகூட பொறுப்பாசிரியராகவும், ஆசிரியர் சங்கச் செயலாளராகவும், வலயத் தலைவராகவும், முகாமைத்துவக் குழுச் செயலாளராகவும், உத்தியோகத்தர் நலன்புரி அமைப்பின் செயலாளராகவும், நூலகப் பொறுப்பாசிரியராகவும் இருந்து தனது பொறுப்புகள் மற்றும் கடமைகளை சீரிய முறையில் செய்துமுடித்தார். இவர் நூலகப் பொறுப்பாசிரியராக இருந்த காலப்பகுதியில் புத்தகக் கண்காட்சி, கொடி தினம் போன்றவற்றை ஒழுங்குசெய்து இப்பிராந்தியத்தில் இருந்த ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாய் இருந்து செயற்பட்டார்.

இதேவேளை, பாடசாலையின் இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு பொறுப்பான உதவி அதிபராக இருந்து பாடசாலையின் கீர்த்தி உலகரங்கிற்குச் செல்வதற்கும் இவர் கால்கோளாய்த் திகழ்ந்தார். மாணவர்கள் மத்தியில் உலகரங்கில் நடைபெறும் நிகழ்வுகள், சம்பவங்கள் போன்றவற்றை அறியப்படுத்தும் வகையில் காலை ஆராதனை நிகழ்வுகளில் செய்தி ஒலிபரப்பு நிகழ்ச்சியொன்றை வடிவமைத்து செய்தி அறிக்கையினை காலை ஆராதனையில் ஒலிக்கச்செய்த பிதாமகனாகவும் இவர் திகழ்கின்றார்.

இதுதவிர, பாடசாலை வலைத்தள உருவாக்கம் மேற்கொள்வதற்கும், முப்பரிமாண தள உருவ அமைப்பு உருவாக்குவதற்கும் பிரதானியாக இருந்து செயற்பட்டார்.

கடந்த பல வருடகாலமாக அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் இணைப்பாடவிதானத்திற்கு பொறுப்பான உதவி அதிபராக இருந்து முன்மாதிரி செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்த இவரின் சேவைகளை இப்பிராந்தியத்தின் கல்விச் சமூகம் மெச்சிப் பாராட்டி வருகின்றது.

# றியாலுல் ஜன்னாஹ் வித்தியாலய மாணவர்கள் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை



(மருதமுனை நிருபர்)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சாய்ந்தமருது றியாலுல் ஜன்னாஹ் வித்தியாலயம் சரித்திர சாதனை படைத்துள்ளது. 1959ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இப்பாடசாலை கடற்கரையோரத்தை அண்மித்த பாடசாலையாகும். கடந்த காலங்களில் கடமையாற்றிய அதிபர்கள் பல முயற்சிகளைச் செய்தபோதிலும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் முன்னேற்றங்கள் காணாத நிலையில் 2018ஆம் ஆண்டு இரண்டு மாணவர்கள் சித்தியடைந்ததே உச்ச சாதனையாகும்.

அதன்பின்னர் எவருமே சித்தியடையாத நிலையில், கொரோனா காரணமாக நாட்டில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த நிலையில் 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 06ஆம் திகதி இப்பாடசாலையின் புதிய அதிபராகப் பொறுப்பேற்ற அலியார் முகம்மட் அன்சார் எடுத்த தீவிர முயற்சியினால் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் அபிவிருத்திச் சபை உறுப்பினர்களின் அர்ப்பணிப்புடன் இவ்வருடம் 52 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 40 மாணவர்கள் 70 புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். இவர்களில் அப்துல் அஹத் பாத்திமா-161, ஜஹீர்கான் அதீனா-155, அப்துல் மஜீத் பாத்திமா அஜ்கா-155 ஆகியோர் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுடன் கண்பார்வையற்ற விரல்களால் தொட்டு உணர்ந்து வாசித்து பிரைல் மூலம் விடை எழுதும் விசேட தேவையுடைய மணவன் ஏ.ஆர்.எம்.தன்வீர் ஆசிப்-136 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து இந்த சரித்திர சாதனையைப் படைத்துள்ளார். புதிய அதிபராகப் பொறுப்பேற்ற அலியார் முகம்மட் அன்சாரின் வழிகாட்டலில் பிரதி அதிபர் எஸ்.அல்-சப்றி மற்றும் உதவி அதிபர் திருமதி ஏ.எல்.சப்றீனா பேகம் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஆசிரியைகளான திருமதி எம்.எச்.பஷீறா பேகம், திருமதி ஏ.எம்.ஹலீபா, திருமதி எஸ்.டீ.எஸ்.அதீதா, ஆசிரியர் ஏ.டபள்யு.முனவ்வர் ஆகியோரின் கற்பித்தலில் இந்த நான்கு மாணவர்களும் சித்திடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலமைப்பரிசில் பரீட்சையில் அக்பர் வித்தியாலயத்தில் ஆறு மாணவர்கள் சித்தி



(மருதமுனை நிருபர்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அக்பர் வித்தியாலயத்தில் ஆறு மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். புதிதாகப் பொறுப்பேற்ற அதிபர் எம்.சி.முஹம்மட் மபாஸின் வழிகாட்டலில் ஆசிரியை திருமதி ஜனுஸ் சிபாயா ஷாஜகானின் கற்பித்தலில் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பெற்றோர்களின் பங்களிப்புடன் இந்த மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

அதிபர் எம்.சி.முஹம்மட் மபாஸ், ஆசிரியை திருமதி ஜனுஸ் சிபாயா ஷாஜகான், மாணவர்களான எம்.எவ்.அப்சி அஹமட் - 172, எம்.ஜே.அப்தான் -162, எவ்.அஸ்மத் ஸறா -153, ஏ.எம்.அஹமட் அம்சில் - 151, எம்.எம்.சிஹாப் சுக்ரி-150, ஏ.எம்.மஆஸ் அஹமட் - 147 ஆகியோரே சித்தியடைந்த மாணவர்களாவர்.

22 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 20 மாணவர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இவர்களில் ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆயிரம் மாணவர்களுக்கு பாகிஸ்தானில் உயர்கல்வி

# 11 பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் கூட்டாக அறிவிப்பு

## ஏப்ரல் 30இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் கோரிக்கை







(அஷ்ரப் ஏ சமத்)

பாகிஸ்தானில் உயர்கல்வி பயிலுவதற்காக இலங்கை மாணவர்கள் ஆயிரம் ஆயிரம் பேருக்கு அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் திட்டமொன்றை வழங்கவுள்ளதாகவும் எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னர் ஒன்லைன் ஊடாக மாணவர்கள் விண்ணப்பிக்க வேண்டுமென்றும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் அந்நாட்டுப் பல்கலைக்கழகங்களது உபவேந்தர்கள் தெரிவித்தனர்.

பாகிஸ்தானிலிருந்து 11 பல்கலைக்கழகங்களது உபவேந்தர்கள், பேராசிரியர்கள், பணிப்பாளர்கள் இலங்கை வந்துள்ளனர். இவர்கள் இணைந்து நடத்திய ஊடக மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்

இம் மாநாட்டில் பாகிஸ்தானின் உயர்கல்வி அமைச்சின் ஆணைக்குழுவின் ஆலோசகர் உவைஸ் அஹமட், லாஹூர் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் அஸ்கர் சயிடி, கைபர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி சியா உல் ஹக், கராச்சி டோ பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் தையுபா, லாஹூர் யு.ஈ.ரீ.பணிப்பாளர் பேராசிரியர் ஆசிப் அலி, காராச்சி என்.ஈ.டீ. பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மொஹமட் வசிப், இஸ்லாமாபாத் சர்வதேச மாணவர்கள் ஆர்வலர்கள் பேராசிரியர் அலி தவாப் லாஹூர் பெண்கள் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மொஹமட் சகிட் ஜெமீல், ஈ பேஸ்வார் விஞ்ஞான் பேராசிரியர் கலாநிதி உஸ்மான் கனி ஆகியோர் தங்களது பல்கலைக்கழகங்களது வசதிகள், அங்குள்ள மாணவர்கள் நலன்கள் கற்கைநெறிகள் பற்றி ஊடகங்களுக்கு விளக்கிக் கூறினார்கள்.

இங்கு உரையாற்றிய பாகிஸ்தான் உயர்கல்வி அமைச்சின் ஆலோசகர் உவைஸ் அஹமட் தெரிவித்தாவது,

அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் பாகிஸ்தானிலிருந்து 11 பல்கலைக்கழகங்களது உபவேந்தர்கள், பணிப்பாளர்கள், பேராசிரியர்கள், பதிவாளர்கள் இலங்கை வந்துள்ளோம். கொழும்பில் எக்ஸ்போ கண்காட்சியிலும் கண்டியிலுள்ள பாகிஸ்தான் அலுவலகத்திலும் எங்களது கண்காட்சிகள், மாணவர்களுக்கான விண்ணப்பம், பயிற்சிநெறிகள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்படும்.

அண்மையில் இலங்கை வந்திருந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கை ஜனாதிபதி மற்றும் உயர் கல்வியமைச்சருக்கிடையே கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின்படி இலங்கை மாணவர்களுக்கு இன, மத நிற, மொழி வேறுபாடுகளின்றி இந்த இலவச பட்டக் கல்வியை இலங்கை மாணவர்களுக்கு வழங்குகின்றோம். நூற்றாண்டுகளுக்கு மேலாக பழமை வாய்ந்த லாஹூர் பல்கலைக்கழகம், பெண்கள் பல்கலைக்கழகம், அரச லாஹூர் கல்விக் கலாசாலை, மேலும் சில பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் தெரிவுசெய்யும் பயிற்சிநெறிகள் அனுமதி வழங்கப்படும் குறிப்பாக, மருத்துவம், பொறியியல், இளங்கலை பட்டப்படிப்புத் துறைகளுக்கு ஜி.சீ.ஈ. உயர்தரம் 65 வீத மதிப்பெண்களுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். முதுமாணி, பட்டதாரி, கலாநிதி முதுமாணி மட்டத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். வயது எல்லை 23 முதுமாணி 35 - 40 வயதுக்கும் மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

இதனை விட தங்குமிட வசதிகள், ஒருவழி பிரயாணச்சீட்டு, கற்கைநெறிகளுக்கான செலவுகள் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இலங்கையில் பிராந்தியங்களுக்கு நேரடியாகச் சென்று விண்ணப்பித்த மாணவர்களுக்கிடையே பரீட்சை ஒன்று நடத்தப்பட்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இறுதியாக விண்ணப்பங்கள் இலங்கை உயர் கல்வியமைச்சு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, பாகிஸ்தான் இலங்கை உயர்ஸ்தானிகராலயங்கள் ஊடாக தெரிவுசெய்யப்பட்டு அனுமதிகள் வழங்கப்படும்.

பாகிஸ்தானில் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், இலங்கை, மத்திய கிழக்கு நாடுகள், என 35 நாடுகளுக்கு மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் எமது பல்கலைக்கழகங்களில் பயின்று வெளியேறுகின்றனர். இலங்கை மாணவர்கள் கூடுதலாக மருத்துவத்துறையில் நூற்றுக்கணக்கானோர் கடந்த காலங்களில் கற்று வெளியேறி இலங்கையின் பல பாகங்களில் மருத்துவ தொழிலைச் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் தங்களது விண்ணப்பங்களை ஒன்லைன் ஊடாக http://hec.gov.pk/site/pksl இல் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதியாகும் என தெரிவிக்கப்பட்டது.

## மருந்தகத்தில் 17 இலட்சம் ரூபா பணம், பொருள் கொள்ளை

### கொட்டாவவில் சந்தேகநபர் கைது

கொட்டாவ, மஹல்வராவ பிரதேசத்திலுள்ள தனியார் மருந்தகமொன்றில் 17 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்களை கொள்ளையிட்ட நபரொருவரை கொட்டாவ பொலிஸார் நேற்று முன்தினம் (27) கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் வென்னப்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர், குறித்த தனியார் மருந்தகத்திலிருந்து அதிக விலையுடைய விற்றமின் வில்லைகள், தைலங்கள் உள்ளிட்ட சிலவகை மருந்துப் பொருட்களை திருடியுள்ள நிலையில், இவரிடமிருந்து 2 இலட்சத்து 74 ஆயிரம் ரூபா பணமும், 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர், குளியாப்பிட்டிய பிரதேசத்திலுள்ள 36 தனியார் மருந்தகங்களை உடைத்து சுமார் 40 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிய குற்றத்திற்காக 15வருட சிறைத்தண்டனை அனுபவித்து விடுதலையானவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம்:

### 40 வயதான நபர் பிபிலையில் கைது

(கெலும் குணதிலக)

பிபிலை, ஹமாபொல பகுதியில் 12 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய 40 வயதான குடும்பஸ்தர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவனின் பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வயல்வெளியில் தனியாக இருந்த சிறுவன் மீது இந்த நபர் பாலியல் குற்றம் புரிந்துள்ளார். இது தொடர்பில் சிறுவன், தனது பெற்றோருக்கு தெரிவித்ததையடுத்தே முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுவனை பிபிலை வைத்தியசாலையில் சேர்க்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது தொடர்பில் பிபிலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.பீ.செனரத் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய சவூதி அரேபியாவுக்கு மூன்று நாள் விஜயம்

## முதலீட்டு வாய்ப்புகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராய்வு







பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, கடந்த 19ஆம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை சவூதி அரேபியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

சவூதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் 2022 மார்ச் 14ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் மட்டத்தில் இலங்கைக்கு மேற்கொண்ட முதலாவது இருதரப்பு விஜயத்தைத் தொடர்ந்து இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

இந்த விஜயத்தின்போது, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் அடெல் பின் அஹமட் அல்-ஜூபைருடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்ட இராஜாங்க அமைச்சர், சவூதி அரேபிய இராஜாங்க அமைச்சர் வழங்கிய மதிய உணவு விருந்திலும் கலந்துகொண்டார்.



சவூதி அரேபியாவின் முதலீட்டு அமைச்சர் காலித் ஏ அல்-ஃபாலிஹ் உடனான அவரது சந்திப்பின்போது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கப்பல் போக்குவரத்து, சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், மருந்து மற்றும் ஆடைத் துறைகளில் சவூதி வணிகங்கள் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆகியன குறித்து ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, இலங்கை இராஜாங்க அமைச்சர் மேற்படித் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இராச்சியத்திலுள்ள 25இற்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்களுடனும் சந்திப்பொன்றில் ஈடுபட்டார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையில் முன்னணி நிறுவனமான ஏ.சி.டபிள்யூ.ஏக்கு விஜயம் செய்த இராஜாங்க அமைச்சர், அதன் தலைவர் மொஹமட் அப்துல்லா அபுனையனை சந்தித்தார். அமெரிக்க மின்சார வாகன உற்பத்தி நிறுவனமான லுசிட் குரூப் இன்க்கு விஜயம் செய்த இராஜாங்க அமைச்சர் பாலசூரிய, அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் பைசல் சுல்தானை சந்தித்தார்.

வணிகம், மின்சாரம், சுற்றுச்சூழல், சுற்றுலா, கப்பல் போக்குவரத்து, கல்வி மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பன்முகப்படுத்தப்பட்ட வகையில் கவனம் செலுத்தும் முன்னணி நிறுவனங்களின் குழுவான அஜிலான் பிரதர்ஸ் நிறுவனத்திற்கும் இராஜாங்க அமைச்சர் விஜயம் செய்தார்.

குழுவின் தலைமை நிறைவேற்று அதிகாரி பொறியியலாளர் அலி அல்ஹாஸ்மியையும் இராஜாங்க அமைச்சர் சந்தித்தார். சவூதி இராச்சியத்திலுள்ள 38 அறைகளின் தலைமை அமைப்பான சவூதி சபைக் கூட்டமைப்பில் இலங்கையில் வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்த முக்கிய உரையையும் இராஜாங்க அமைச்சர் பாலசூரிய நிகழ்த்தினார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சந்தைப் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன, சவூதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவர் பி.எம்.அம்சா, மேலதிக செயலாளர் பேராசிரியர் சஜ் யூ.மெண்டிஸ் மற்றும் தூதரக அதிகாரிகள் இராஜாங்க அமைச்சர் பாலசூரியவுடன் சந்திப்புகளில் கலந்துகொண்டனர்.

## இலக்கு யாருக்கு?



சிலாபம், கரவிட்டாகாரய பகுதியில் இடம்பெற்ற தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிகழ்வொன்றில இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, வாயுத் துப்பாக்கியொன்றை பரிசீலிக்கிறார்.
(படப்பிடிப்பு: ஜூட் சமந்த)

## மாத்தளையில் கோழி இறைச்சியின் விலை 1,000 ரூபாவை தாண்டியது

### அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் விசனம்

(மாத்தளை செய்தியாளர்)

மாத்தளை மாவட்ட மாத்தளை மற்றும் தம்புள்ளை பெரு நகரங்கள் உட்பட சூழவுள்ள சகல உப நகரங்களிலும் கோழி இறைச்சி மற்றும் தேங்காயெண்ணெய் என்பவற்றின் விலை கிலோ 1,100 தொடக்கம் 1,300 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி இரு பெரு நகரங்கள் உட்பட சூழவுள்ள சகல உப நகரங்கள் மற்றும் கிராமப் பகுதிகளும் கோப்பை பால் தேநீரின் விலை 100 ரூபாவாகவும் ஒரு பிளேன் ரீயின் விலை 60 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் சமையல் எரிவாயுகளை பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரிதும் அல்லல்பட்டுக்கொண்டிருக்கும் வேளை, எரிவாயு அடுப்புக்கு பதிலாக மண்ணெண்ணெய் அடுப்புகளை கொள்வனவுசெய்த மக்கள் இப்பொழுது மண்ணெண்ணெயும் இல்லாமல் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, டொலர் இல்லாமை காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலை அசுர வேகத்தில் உயர்வடைவதால் அதனைச் சாதகமாக பயன்படுத்திகொள்ளும் சுயநல எண்ணம்கொண்ட சில வர்த்தகர்கள் அரசாங்கத்தின் விலையை மீறி தான்தோன்றித்தனமாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரித்து விற்பனை செய்வதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. எனினும், நுகர்வோர் விவகார அதிகாரசபையினர் இது குறித்து கண்டுகொள்வதில்லையெனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

## பிரெஞ்சுக் குடியரசின் செனட்டர்கள் குழுவுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் சந்திப்பு



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பிரெஞ்சுக் குடியரசின் செனட்டர்கள் குழுவை கடந்த வியாழக்கிழமை கொழும்பில் சந்தித்தார்.

இதன்போது, சுகாதாரச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, கல்வி மற்றும் கலாசாரத்துறைகளிலான ஒத்துழைப்பிற்கு முக்கியத்துவம் அளித்து, அரசியலமைப்பு சீர்திருத்தம், இலங்கையில் பிரெஞ்சு நிறுவனங்களின் முதலீடு, இலங்கையில் இருந்தான பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிக்கான சந்தைகளை பிரான்ஸில் விரிவுபடுத்துதல் (குறிப்பாக தேயிலை, மீன்பிடிப் பொருட்கள், ஆடைகள், இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள்) மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இலங்கைக்கும் பிரான்ஸ் குடியரசிற்கும் இடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வருவதாக பிரான்ஸ் செனட்டர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர், அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பிரான்ஸ் தூதுவர் எரிக் லாவெர்ட் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் கொலம்பகே ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.








தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.கா.ஸ்டாலினுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தில் வசிக்கும் தமிழ் பேசும் புலம்பெயர் மக்கள் டுபாயில் கடந்த சனிக்கிழமை (26) வழங்கிய மாபெரும் வரவேற்பு நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.



# உணவு - எரிபொருள் கிடங்குகளை குறிவைத்து தகர்க்கும் ரஷ்யா

**அடுத்த மரியுபோல் நகரமாக மாறுகிறது செர்னிஹிவ்**

- **''விரைவில் கெரில்லா போர் தொடங்கப்படும்'': - உக்ரைன் இராணுவ உளவுத்தலைவர் தெரிவிப்பு**
- **துருக்கியில் கூடிய இருநாட்டு பிரதிநிதிகள்; மூன்று நாட்கள் சமாதானப் பேச்சுவார்த்தை**

உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் இன்று 34ஆவது நாளை எட்டியுள்ளது. இருநாடுகளுக்கிடையிலான சமாதானப் பேச்சு துருக்கியில் இடம்பெற்றுவரும் நிலையில், மீண்டும் உக்ரைன்மீது ரஷ்யா தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

கார்கீவ் அணு ஆராய்ச்சி மையத்தின் மீது குண்டுகளை வீசிய ரஷ்ய இராணுவம், லிவிவ் நகரின் உணவு, எரிபொருள் கிடங்குகள் மீது சரமாரி ரொக்கெட் குண்டுகளை வீசி தகர்த்தது. செர்னிஹிவ் நகரில் கடுமையான நாச வேலைகளை ரஷ்ய இராணுவம் தொடங்கியிருப்பதால், மரியுபோலைப் போன்று இந்த நகரமும் சூறையாடப்படும் என அஞ்சப்படுகிறது.

**3 நாட்கள் சமாதானப் பேச்சு**

கடுமையான போர் மூண்ட நிலையில் ரஷ்யாவும் உக்ரைனும் 3 நாட்கள் சமாதானப் பேச்சில் இறங்கியுள்ளன.

துருக்கியில் நேற்று ஆரம்பமாகிய இந்த சமாதானப் பேச்சில் இருநாட்டு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நேரடியாக பங்கேற்கின்றனர். தொடர்ந்தும் இன்றும் நாளையும் பேச்சுவார்த்தை தொடரவுள்ளது. இதில் ஆறு முக்கிய அம்சங்களில் நான்கு அம்சங்களில் இருதரப்பிலும் உடன்பாடு எட்டப்பட்டதாக பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்த துருக்கி ஜனாதிபதி தயிப் அர்துகான் தெரிவித்துள்ளார்.

நேட்டோவில் உக்ரைன் இணையாதது, உக்ரைனில் ரஷ்ய மொழிப் பயன்பாடு, ஆயுதக் குறைப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவாதம் ஆகியவற்றில் இருதரப்பிலும் ஒத்த கருத்து ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

**விரைவில் கெரில்லா போர்**

உக்ரைன் இராணுவ உளவுத் தலைவர் தெரிவிக்கையில்,

''உக்ரைனை இரண்டாகப் பிரிக்க ரஷ்யா முயற்சிக்கிறது. அதன் ஆக்கிரமிப்புப் பகுதிகளை ஒன்றிணைத்து ஒரே நாடாக்க காய்நகர்த்துகிறது. எனவே, ரஷ்ய ஆதரவுப்படை வசமுள்ள பகுதிகளில் விரைவில் கெரில்லா தாக்குதல் தொடங்கப்படும்'' - என்றார்.

கெரில்லா போர்முறை என்பது ஆயுதம் தாங்கிய பொதுமக்களைக்கொண்ட போராளி குழுவினர், மறைந்திருந்து பெரிய படைகளை எதிர்த்துப் போரிடுவதாகும்.

இதற்கிடையே, கிளர்ச்சிப்படை வசமுள்ள லூஹான்ஸ்க் பிராந்தியத்தின் தலைவர் லியோனிட் தெரிவிக்கையில், ''டோனெட்ஸ்க், லூஹான்ஸ்க் பகுதிகளை சுதந்திரமான பகுதிகளாக ரஷ்யா அறிவித்துள்ளது. அதைத் தொடர்ந்து, இப்பகுதிகளை ரஷ்யாவுடன் ஒன்றிணைக்க விரைவில் வாக்கெடுப்பு நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது'' - என்றார்.

**என்ன செய்கிறது நேட்டோ? எதற்காக பயப்படுகிறீர்கள்?**

உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தனது நாட்டிற்கு போர் விமானங்கள், டாங்கிகள் மற்றும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை வழங்குமாறு மேற்கத்தேய நாடுகளை வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட வீடியோவில்,

''ஐரோப்பாவில் சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டிய ஆயுதங்கள் தூசி படிந்துகொண்டிருக்கின்றன. ரஷ்ய விமானத்தை இயந்திரத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்த முடியாது. எனவே, எங்களுக்கு போர் விமானங்கள், டாங்கிகள், ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் வேண்டும். நேட்டோ என்ன செய்கிறது? அது ரஷ்யாவால் வழிநடத்தப்படுகிறதா? அவர்கள் எதற்காக காத்திருக்கிறார்கள்? 33 நாட்களாக போர் நடந்துவரும் நிலையில், கொஞ்சம் தைரியத்துடன் நேட்டோ எங்களுக்கு உதவ முன்வர வேண்டும். நாங்கள் கேட்பது நேட்டோவிடமுள்ள ஆயுதத்தில் ஒரு சதவீதம் மட்டும்தான். அதற்கு மேல் நீங்கள் தர வேண்டாம்'' - என்றார்.

மேலும், தனது நாட்டு மக்கள் உணவு, தண்ணீருக்காக தவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் அவர்கள் ரஷ்யா மீது கடும் ஆத்திரமடைந்துள்ளதாகவும் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**தாக்குதலை தீவிரப்படுத்திய ரஷ்யா**

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதை தடுக்க அந்நாட்டின் மீது கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ரஷ்யா போர் தொடுத்தது. ஒரு மாதத்தைத் தாண்டி போர் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

கடந்த சில நாட்களாக தலைநகர் கீவ்வை கைப்பற்றும் முயற்சியில் ரஷ்யப் படைகள் பின்தங்கின. இதனால் தாக்குதல் சற்று குறைந்திருந்திருந்த நிலையில், ரஷ்யா தற்போது கூடுதல் படைகளை குவித்துள்ளது. இதனால், அண்டைநாடான போலந்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சென்ற நிலையில், அதன் அருகாமையில் சுமார் 60 கி.மீ. தொலைவிலுள்ள உக்ரைன் நகரமான லிவிவ்வில் சனிக்கிழமை இரவே ரஷ்யா வான்வழித் தாக்குதலை தீவிரப்படுத்தியது.











லிவிவ் நகரிலுள்ள உணவு, எரிபொருள் சேமிப்புக் கிடங்குகள் மீது சரமாரியாக ரொக்கெட் குண்டுகளை ஏவி தகர்த்துள்ளது. எரிபொருள் கிடங்கு மீது 3 ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 2 எரிபொருள் டேங்குகள் முற்றிலும் தீப்பற்றி எரிந்துள்ளன. இதேபோல், மக்களுக்கு உணவு வழங்குவதற்கான உணவுக் களஞ்சியசாலைகளையும் ரஷ்யா குறிவைத்து தகர்த்துள்ளது. எதிர்கால தேவைக்காக எதையும் உக்ரைன் அரசு சேமிக்கக் கூடாது என்பதற்காக இதுபோன்ற கிடங்குகள் தொடர்ந்து குறிவைத்து தகர்க்கப்படுகின்றன. ஏற்கனவே, தலைநகர் கீவ்வின் புறநகரான இர்பினின் கலினிவ்கா பகுதியில் எரிபொருள் சேமிப்புக் கிடங்கொன்று ரஷ்ய ஏவுகணைத் தாக்குதலில் அழிக்கப்பட்டது.

இதுமட்டுமன்றி, நீண்டதூர இலக்கை தகர்க்கும் எஸ்-300 ஏவுகணை மூலம் கீவ் அருகேயுள்ள ஆயுதக் கிடங்கையும், போர் விமான எதிர்ப்பு அமைப்பையும், ஏராளமான ட்ரோன்களையும் அழித்துள்ளதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

இப்போரில் அதிகம் பாதிக்கப்பட்ட உக்ரைன் நகரம் மரியுபோல். அங்கு கிட்டத்தட்ட அனைத்து குடியிருப்புக் கட்டடங்களையும் ரஷ்யா நாசம் செய்துவிட்டது. அதைத் தொடர்ந்து தற்போது செர்னிஹிவ் நகரில் இதேபோன்ற தாக்குதல் தொடங்கியுள்ளதாக உக்ரைன் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். அடுத்த மரியுபோலாக செர்னிஹிவ் நகரை மாற்ற ரஷ்யப் படைகள் தொடர் தாக்குதல் நடத்திவருகின்றன.

சனிக்கிழமை இரவு முழுவதும் தொடர்ந்து குண்டு சத்தங்கள் கேட்டபடி இருந்ததாக பதுங்கு குழிகளில் தங்கியுள்ள மக்கள் தெரிவித்தனர். இதனால் வீட்டின் அடித்தளத்தில் பதுங்கியிருந்த மக்கள் காலையில், உணவு, தண்ணீர் தேடி வெற்று குடிநீர் கேன்களுடன் அலையும் அவலம் நிலவுகிறது. அங்கு தண்ணீர், உணவு பற்றாக்குறை கடுமையாகவுள்ளது. மொத்தம் 2.8 இலட்சம் மக்கள் வசிக்கும் செர்னிஹிவ் நகரில் பாதிக்கு பாதி மக்கள் வெளியேறியுள்ளனர். ஏற்கனவே செர்னோபிள் அணு மின் நிலையத்தின் மீது ரஷ்யா தாக்குதல் நடத்ததியதாக குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், கார்கீவ் நகரிலுள்ள அணு ஆராய்ச்சி மையத்தின் மீதும் நேற்றுமுன்தினம் குண்டுவீசியது. இதில், மருத்துவ மற்றும் தொழிற்சாலை தேவைகளுக்கான கதிரியக்க ஐசோடோப்புகளின் ஆராய்ச்சி மற்றும் உற்பத்திக்காக அமைக்கப்பட்ட புதிய நியூட்ரோன் மைய கட்டடம் சேதமடைந்துள்ளது.

அதேசமயம், டோனெட்ஸ்க், லூஹான்ஸ்க் ஆகிய கிளர்ச்சிப்படை கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் உக்ரைன் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நகரங்களை உள்ளிடக்கிய டான்பாஸ் பிராந்தியத்தையே ஒட்டுமொத்தமாக கைப்பற்ற ரஷ்யா, உக்ரைன் படைகளை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்துகிறது. இதில் வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளை குடியிருப்புப் பகுதிகளில் வீசி ரஷ்யா போர்க் குற்றத்தில் ஈடுபடுவதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது. போர் தொடங்கி ஒரு மாதத்தில் இதுவரை 37 இலட்சத்துக்கும் அதிகமானோர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இதுவரை இப்போரில் 139 குழந்தைகள் பலியாகியுள்ளனர்.

**ஒடேசாவை பாதுகாக்க களமிறங்கும் மக்கள்**

கருங்கடலை ஒட்டி அமைந்துள்ள ஒடேசா துறைமுக நகரம் உக்ரைனின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது. நாட்டின் மிகப்பெரிய துறைமுகமும், உக்ரைன் கடற்படையின் தலைமையகமும் இங்கு அமைந்துள்ளன. இதனால்தான் ரஷ்யா அடுத்ததாக இந்நகரை குறிவைக்கும் என்ற அச்சம் ஒடேசா நகர மக்களுக்கு எழுந்துள்ளது.

போர்க்கப்பலிலிருந்து கடந்த வாரம் ரஷ்யா ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தியது. இதனால், ஒடேசா மக்களின் அச்சம் மேலும் அதிகரித்துள்ளது. உக்ரைனை வீழ்த்த இந்த நகரத்தையும் மரியுபோலைப் போன்று ரஷ்ய இராணுவம் தரைமட்டமாக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதனால் பல வரலாற்றுச் சிறப்புகளைக்கொண்ட இந்நகரை பாதுகாக்க பொதுமக்களே களமிறங்கியுள்ளனர். இங்கிருந்து ஒரு சதவீதம் பேர் மட்டுமே தற்போதுவரை வெளியேறியுள்ளனர். பலரும் ஆயுதமேந்தி பயிற்சிபெற்று வருகின்றனர். ரஷ்யா தாக்கினால் ஒடேசாவை பாதுகாக்க உயிரையும் பணயம் வைக்க ஒடேசா மக்கள் தயாராகியுள்ளனர்.

**3 கிராமங்கள் மீட்பு**

உக்ரைன் படைகள் ஜபோரிஜியா மாகாணத்திலுள்ள ட்ரோஸ்டியானெட்ஸ் கிராமத்தையும், சுமியிலுள்ள ஒப்லாஸ்ட், பொல்டவ்கா ஆகிய 2 கிராமங்களையும் ரஷ்யாவிடமிருந்து மீட்டுள்ளதாக அந்நாட்டு இராணுவம் உறுதிசெய்துள்ளது. அங்கு போரிட்ட ரஷ்ய வீரர்கள் சிலரையும் சிறைப்பிடித்துள்ளனர்.

அதேசமயம், செர்னிஹிவ் அருகே அமைந்துள்ள ஸ்லாவுடிச் நகரில் ரஷ்ய இராணுவம் நுழைந்துள்ளது. இது, செர்னோபிள் அணு மின் நிலைய பணியாளர்கள் வசிப்பதற்காக உருவாக்கப்பட்ட நகரமாகும். இங்கு தற்போது நுழைந்து ரஷ்யப் படைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நகர மக்கள் வீதியில் போராட்டம் நடத்தியதாக அந்நகர ஆளுநர் ஒலேக்சான்டிர் தெரிவித்துள்ளார். ரஷ்யப் படையினர் வானை நோக்கி சுட்டு எச்சரித்தும், கண்ணீர்ப் புகைக்குண்டு வீசியும் மக்கள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து கோஷமிட்டதாக ஆளுநர் தெரிவித்துள்ளார். முன்னதாக ஆளுநர் ஒலேக்சான்டிரை ரஷ்ய இராணுவம் கடத்தியதாகவும் பின்னர் விடுவித்ததாகவும் தகவல்கள் வெளியாகின.

---

# உலக செய்திகள்

**94ஆவது ஒஸ்கார் விருது விழா:**

## 6 விருதுகளை அள்ளிய டூன்; சிறந்த நடிகர் ஸ்மித் - நடிகை ஜெசிகா

**மனைவியை கேலிசெய்த தொகுப்பாளரின் கன்னத்தை வீங்கவைத்த வில் ஸ்மித்**





உலகளவில் சினிமாத்துறைக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாக ஒஸ்கார் கருதப்படுகிறது. 2022ஆம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருது வழங்கும் விழா லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. 94ஆவது ஒஸ்கார் விருது விழாவில் சிவப்பு கம்பள வரவேற்பு நிகழ்வில் பிரபல நடிகர், நடிகைகள் கண்கவர் உடைகளை அணிந்து வந்து அலங்கரித்தனர்.

நிகழ்ச்சியை அமெரிக்காவின் பிரபல ஸ்டான்ட்-ஒப் கொமெடியனான கிறிஸ் ரொக் தொகுத்து வழங்கினார். 24 பிரிவுகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. இதில் சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருது ஜெசிகா சேஸ்டெய்னுக்கும், சிறந்த நடிகருக்கான விருது வில் ஸ்மித்துக்கும் வழங்கப்பட்டன. டூன் படம் அதிகபட்சமாக 6 விருதுகளை தட்டிச் சென்றது. சிறந்த படமாக கோடா தெரிவானது.




**தொகுப்பாளரை அறைந்த நடிகர்**

ஒஸ்கார் விருது வழங்கும் விழாவில், தன் மனைவியை கேலி செய்ததாக நிகழ்ச்சித் தொகுப்பாளரை நடிகர் வில் ஸ்மித் ஓங்கி அறைந்த சம்பவம் பார்வையாளர்களை அதிர்ச்சியடைய வைத்தது.

நிகழ்ச்சித் தொகுப்பாளரான அமெரிக்க நகைச்சுவை நடிகர் கிரிஸ் ரொக் சிறந்த ஆவணப்படத்துக்கான விருதை பற்றி அறிவிக்கும்போது, வில் ஸ்மித்தின் மனைவி ஜடா பிங்கெட் ஸ்மித்தின் தோற்றத்தை தொடர்புபடுத்தி பேசியதாக தெரிவிக்கப்படுகிறது.

அதில் கோபமடைந்த வில் ஸ்மித் மேடைக்கு வந்து கிரிஸ் ரொக்கின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விட்டார். பிறகு தன் இருக்கைக்கு சென்ற வில் ஸ்மித், தன் மனைவி குறித்து பேச வேண்டாம் என ஆவேசமாக கூறினார்.



இதனால், விழா அரங்கில் சிறிதுநேரம் சலசலப்பு ஏற்பட்டது. வில் ஸ்மித்தின் மனைவி, அலோபிசியா என்னும் தலைமுடி உதிர்ந்து விழும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சிறந்த நடிகர்**

சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருது ஹொலிவுட் நடிகர் வில் ஸ்மித்திற்கு முதன்முறையாக கிடைத்துள்ளது. 'கிங் ரிச்சர்ட்' திரைப்படத்தில் நடித்ததற்காக இந்த விருதை அவர் வென்றுள்ளார்.

**சிறந்த நடிகை**

சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருதை ஹொலிவுட் நடிகை "ஜெசிகா சேஸ்டெய்ன்" தட்டிச் சென்றுள்ளார். "த அய்ஸ் ஒவ் டெம்மி ஃபாய்" (The Eyes of Tammy Faye) திரைப்படத்திற்காக ஜெசிகா சேஸ்டெய்னுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

**6 விருதுகளை அள்ளிய DUNE**

6 விருதுகள் வென்று டூன் (DUNE) திரைப்படம் விழாவில் ஆதிக்கம் செலுத்தியது. சிறந்த ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, சிறந்த தயாரிப்பு மற்றும் வடிவமைப்பு என 6 பிரிவுகளில் DUNE திரைப்படத்திற்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

* த பவர் ஒவ் த டோக் திரைப்படத்தை இயக்கியதற்காக ஜேன் கெம்பியன் சிறந்த இயக்குநருக்கான விருதை வென்றார்.
* ஷியான் ஹெட்டார் இயக்கிய 'கோடா' சிறந்த திரைப்படத்திற்கான விருதை தட்டிச் சென்றுள்ளது.
* சிறந்த ஆடை வடிவமைப்புக்கான விருதை ஜென்னி பீவன் வென்றுள்ளார்
* சிறந்த அனிமேஷனுக்கான விருதை encanto திரைப்படம் வென்றது.
* சிறந்த துணை நடிகருக்கான விருதை கோடா படத்திற்காக டிராய் கோட்சர் வென்றார். செவித்திறன் குறைபாடுள்ள டிராய் கோட்சர் விருது பெற்ற முதல் நடிகராவார்.
* செவித்திறன் குறைபாடு கொண்ட மார்லீமாட்லின் சிறந்த நடிகைக்கான விருது பெற்ற முதல் மாற்றுத்திறனாளி என்பது குறிப்பிடத்தக்கது.
* சிறந்த வெளிநாட்டு திரைப்படத்திற்கான விருதை ட்ரைவ் மை கார் (Drive my car) திரைப்படம் வென்றுள்ளது. ஜப்பான் நாட்டு திரைப்படமான இந்த படத்தை யூசுக் ஹமாகுச்சி (ryusuke hamaguchi) இயக்கியுள்ளார்.

## கன்னி ஆட்டத்திலேயே பட்டையை கிளப்பிய பானுக

# இலங்கை அணியில் மீண்டும் இடம்பெறுவாரா?

(ஏ. அகீல் சிஹாப்)

RCB vs PBKS
போட்டியை காண

தனது கன்னி ஐ.பி.எல். போட்டியில் விளையாடிய இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான பானுக ராஜபக்ஷவின் அதிரடி ஆட்டம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரின் மூன்றாவது லீக் போட்டி நேற்று முன்தினம் இரவு நவி மும்பை டி.வை பட்டில் மைதானத்தில் பொப் டு பிளசிஸ் தலைமையிலான ஆர்.சி.பி. அணிக்கும், மயங்க் அகர்வால் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய ஆர்.சி.பி. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 205 ஓட்டங்களை குவித்தது.

அணித்தலைவர் பொப் டு பிளசிஸ் 88 ஓட்டங்களையும், விராட் கோஹ்லி 41 ஓட்டங்களையும், தினேஷ் கார்த்திக் அதிரடியாக 32 ஓட்டங்களையும் பெற்றனர். 206 என்ற இமாலய வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணி ஆரம்பத்திலிருந்தே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 3ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரராக ஆடுகளம் நுழைந்த இலங்கை அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் பானுக ராஜபக்ஷ 22 பந்துகளை எதிர்கொண்டு 4 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 43 ஓட்டங்களை அதிரடியாக குவித்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் ஒடின் ஸ்மித்தின் அதிரடி துடுப்பாட்டம் மூலம்




பஞ்சாப் கிங்ஸ் அணி 19 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது. உடற்தகுதி பிரச்சினை காரணமாக இலங்கை அணியின் தேர்வாளர்களினால் இலங்கை தேசிய அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்ட பானுக ராஜபக்ஷ, ஐ.பி.எல். தொடரில் தனக்கு கிடைத்த வாய்ப்பின் மூலம் அதிரடி ஆட்டத்தை வெளிக்காட்டி மீண்டும் இலங்கை தேர்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.




# 10 வருடங்களாக மும்பைக்கு தொடரும் சோகம்!

MI vs DC
போட்டியை காண

2022 ஐ.பி.எல். தொடரில் தங்களது முதல் போட்டியில் தோல்வியை தழுவிய ரோஹிட் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி, தொடர்ந்து 10 வருடங்களாக சோகத்தை எதிர்கொண்டு வருகிறது.

இந்தாண்டு ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது லீக் போட்டியில் நேற்று முன்தினம் மாலை ரோஹிட் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் - ரிஷப் பண்ட் தலைமையிலான டெல்லி கெப்பிடல்ஸ் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி இஷான் கிஷானின் அதிரடி ஆட்டம் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 177 ஓட்டங்களை சேர்த்தது.

இலக்கை துரத்திக் களமிறங்கிய டெல்லி அணியில் பிரித்வி ஷா (38), செய்பர்ட் (21) ஓரளவுக்கு சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தினர். அடுத்து மந்தீப் சிங் (0), ரிஷப் பண்ட் (1), ரௌமன் பௌல் (0) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்ததால் மும்பை அணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருந்தது.

ஷர்தூல் தாகூர் 11 பந்துகளில் 22 ஓட்டங்கள் அடித்து, ஆட்டத்திற்குள் டெல்லி அணியை கொண்டுவந்தார். அடுத்து லலித் யாதவ் (48), அக்சர் படேல் (38) ஆகியோர் அபாரமாக விளையாடியதால், டெல்லி அணி 18.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பெற்றது.

மும்பை இந்தியன்ஸ் அணியின் இந்தத் தோல்வியின் மூலம் தொடர்ந்து 10ஆவது சீசனில் அந்த அணி முதல் போட்டியில் தோல்வியுற்றது.




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# தேசிய மட்ட சதுரங்க போட்டிக்கு சாய்ந்தமருது சபிலுல் லமா தகுதி

(மாளிகைக்காடு நிருபர்)

இலங்கை சதுரங்க சம்மேளனம் நடத்திய போட்டியில் சாய்ந்தமருது கமு/அல்-ஹிலால் வித்தியாலயம் சார்பாக பங்குபற்றிய சாய்ந்தமருது சபிலுல் லமா அடுத்த சுற்றான கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்டத்தில் விளையாட தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை சதுரங்க சம்மேளனம் நடத்திய இச்சதுரங்க போட்டித்தொடர் நேற்று முன்தினம் சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. 08 வயதுக்குட்பட்ட பெண்களுக்காக நடத்தப்பட்ட இப்போட்டிகளில் கலந்துகொண்டு சபிலுல் லமா முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவர் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி பயில்கிறார். இவர் இப்போட்டித் தொடருக்கு தெரிவுசெய்யப்பட்ட முதல் அம்பாறை மாவட்ட சிறுமியாவார்.



# மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் சவால் கேடய கிரிக்கெட் போட்டி







(கண்டி நிருபர்)

மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் சவால் கேடய கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார்.

கண்டி, அஸ்கிரிய சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெற்ற இப்போட்டித் தொடரில் கிரிக்கெட் முன்னோடிகளுக்கான போட்டியில் கண்டி மாநகர சபை அணியும், மத்திய மாகாண கல்வித் திணைக்கள அணியும் போட்டியிட்டன. அதில் மத்திய மாகாண கல்வித் திணைக்கள அணி வெற்றிபெற்றது.

திறந்த பிரிவுக்கான போட்டியில் தென் மாகாண கல்வித் திணைக்கள அணிக்கும் மத்திய மாகாண கல்வித் திணைக்கள அணிக்குமிடையே இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தென் மாகாண கல்வித் திணைக்களம் வெற்றிபெற்றது.

முதலாம் இடத்தைப் பெற்ற அணிக்கு ரூ. 2 இலட்சம் ரொக்கப்பரிசும், கேடயமும், இரண்டாம் இடத்தைப் பெற்ற அணிக்கு ரூ. ஒரு இலட்சம் ரொக்கப் பரிசும், கேடயமும், மூன்றாம் இடத்தைப் பெற்ற அணிக்கு ரூ. 30 ஆயிரம் ரொக்கப்பணம் மற்றும் கேடயமும் வழங்கப்பட்டன.

# தொடர்ந்து 4 வருடங்களாக சம்பியனான சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம்





(நிந்தவூர், மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான இறுதிப் போட்டி கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் 5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் 4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்று தொடர்ச்சியாக 4ஆவது வருடமாகவும் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.



# டெஸ்ட் தலைமையிலிருந்து நீக்கப்படுவாரா ரூட்?

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து தோற்றதால் டெஸ்ட் அணியின் தலைமையிலிருந்து ஜோ ரூட் நீக்கப்படுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட்டை 10 விக்கெட் வித்தியாசத்தில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி, டெஸ்ட் தொடரை 1-0 என்ற அடிப்படையில் வென்றது. மூன்றாவது டெஸ்ட்டில் முதல் இன்னிங்ஸில் 204 ஓட்டங்களை எடுத்த இங்கிலாந்து அணி, 2ஆவது இன்னிங்ஸிலும் மோசமாக விளையாடி 120 ஓட்டங்களுக்குள் சுருண்டுபோனது.

கடந்த 5 டெஸ்ட் தொடர்களில் நான்கில் தோற்ற இங்கிலாந்து அணி, இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 1-2 எனப் பின்தங்கியுள்ளது. வெளிநாடுகளில் விளையாடிய மூன்று தொடர்களிலும் தோற்றுள்ளது. (இந்தியா, அவுஸ்திரேலியா, மே.இ.தீவுகள்) சொந்த மண்ணில் விளையாடிய இரு தொடர்களிலும் ஜெயிக்க முடியவில்லை.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் இங்கிலாந்து அணி 9ஆம் இடத்தில் உள்ளது. ஒரு டெஸ்ட்டில் மட்டும் வெற்றிபெற்று 7 டெஸ்ட்களில் தோற்றுள்ளது.

இதன் காரணமாக ஜோ ரூட்டின் பதவியைப் பறிக்க வேண்டும், இங்கிலாந்து டெஸ்ட் அணிக்குப் புதிய தலைவரை நியமிக்க வேண்டும் என்கிற கோரிக்கைகள் எழுந்துள்ளன. ஆனாலும் தொடர்ந்து தலைவராக இருக்க ரூட் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அணியை முன்நகர்த்திச் செல்ல விரும்புகிறேன். இந்த அணி என் பின்னால் உள்ளது. நிறைய நல்ல விடயங்களைச் செய்து வருகிறோம். அவற்றை நல்ல முடிவுகளாக நாங்கள் மாற்ற வேண்டும் என்று ரூட் கூறியுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபை துணிச்சலுடன் செயற்பட்டு புதிய தலைவரை நியமிக்குமா அல்லது ரூட்டின் மீது நம்பிக்கை வைத்து தலைமையில் அவரைத் தொடர அனுமதிக்குமா என்பது விரைவில் தெரிந்துவிடும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7